# வணிகவரி மற்றும் பதிவுத்துறை

## மானியக் கோரிக்கை எண்.10

## வணிகவரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
2023-2024

**பி. மூர்த்தி**
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1 | முன்னுரை | | 1 |
| 2 | வணிகவரித் துறையின் செயல்பாடுகள் | | 2 |
| 3 | வணிகவரித் துறையின் மொத்த வருவாய் வசூல் விவரங்கள் | | 4 |
| 4 | வணிகவரித் துறையின் நிர்வாக செலவினம் | | 4 |
| 5 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஜிஎஸ்டி) அமல்படுத்திய பின்னர் சட்டவாரியான வருவாய் வசூல் விவரங்கள் | | 5 |
| 6 | துறையின் நிர்வாக கட்டமைப்பு | | 6 |
| 7 | நிர்வாக கோட்டங்கள் | | 7 |
| | 7.1 | அதிக வரிசெலுத்துவோர் பிரிவின் செயல்பாடுகள் | 8 |
| 8 | நுண்ணறிவு கோட்டங்கள் | | 10 |
| | 8.1 | நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாடுகள் | 11 |
| | 8.2 | ஆணையரக புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் | 12 |
| | 8.3 | ஆணையரக நுண்ணறிவுப் பிரிவின் இதர நடவடிக்கைகள் | 14 |

| வ. எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| | 8.4 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் புதிய பதிவுகளின் சரிபார்ப்பு | 15 |
| | 8.5 | போலி பட்டியல் தயாரிப்போரை கட்டுப் படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 16 |
| | 8.6 | போலி பட்டியல் குறித்து பொருளாதார குற்றப்பிரிவின் கீழ் நடவடிக்கை | 17 |
| | 8.7 | மின்னணு வழிப்பட்டியினை ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பம் (RFID) மற்றும் வேகச் சீட்டு (FASTag) முறையுடன் ஒருங்கிணைத்தல் | 19 |
| | 8.8 | சோதனை கொள்முதல் | 20 |
| 9 | மேல்முறையீட்டுப் பிரிவு | | 21 |
| | 9.1 | முந்தைய சட்டங்களின் கீழ் முதல் மேல்முறையீடு | 22 |
| | 9.2 | தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் முதல் மேல்முறையீடு | 23 |
| | 9.3 | முந்தைய சட்டங்களின் கீழ் இரண்டாவது மேல்முறையீடு | 25 |

| வ. எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| | 9.4 | சட்டப்பிரிவின் பணிகள் | 27 |
| 10 | தணிக்கை | | 29 |
| | 10.1 | மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படும் தணிக்கை | 29 |
| | 10.2 | தணிக்கைக்கென தனி பிரிவு உருவாக்குதல் | 31 |
| | 10.3 | மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவின் செயல்பாடுகள் | 33 |
| 11 | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | | 36 |
| 12 | வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் பயிற்சிகள் | | 37 |
| 13 | வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு செயல்பாடுகள் | | 41 |
| | 13.1 | மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவின் செயல்பாடுகள் | 41 |
| | 13.2 | மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு | 41 |
| 14 | புகார் பிரிவின் செயல்பாடுகள் | | 41 |

| வ. எண். | | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|---|
| 15 | | தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் வரிவிதிப்பு | 42 |
| 16 | | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் செயல்பாடுகள் | 45 |
| | 16.1 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு மேல்வரி | 46 |
| | 16.2 | 2022–2023–ஆம் ஆண்டில் நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டங்கள் | 47 |
| | 16.2.1 | 47–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் | 48 |
| | 16.2.2 | 48–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் | 50 |
| | 16.2.3 | 49–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தின் முக்கிய நிரல்கள் | 51 |
| 17 | | குறை தீர்க்கும் குழு உருவாக்கம் | 52 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 18 | சரக்குகள் போக்குவரத்தினைக் கண்காணிக்கும் மின்னணு வழிப்பட்டி முறை | 53 |
| 19 | முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு மற்றும் முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் செயல்பாடுகள் | 54 |
| 20 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் மிகை இலாபம் ஈட்டுவதற்கு எதிரான அதிகார அமைப்பு மற்றும் மாநில அளவிலான கண்காணிப்பு குழு | 57 |
| 21 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பொது இணைய முகப்பு | 58 |
| 22 | எளிய முறையில் வணிகம் செய்வதை ஊக்குவித்தல் | 59 |
| | 22.1 'எளிய வணிகப் பிரிவு' உருவாக்கம் | 60 |
| 23 | தமிழ்நாடு வணிகர் நல வாரியம் | 62 |
| | 23.1 உயர்த்தப்பட்ட குடும்ப நல உதவித் தொகை மற்றும் தீ விபத்திற்கான நிவாரண உதவித் தொகை | 63 |

| வ. எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| 24 | மின் ஆளுமை | | 64 |
| | 24.1 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்பு மூலம் புதிய பதிவு | 64 |
| | 24.2 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை தாக்கல் மற்றும் வரி வசூல் | 65 |
| | 24.3 | மதிப்பு கூட்டு வரியின் கீழ் வரி விவர அறிக்கை தாக்கல் மற்றும் வரி வசூல் | 66 |
| | 24.4 | பின்புல அலுவலக பயன்பாட்டு மென்பொருள் | 66 |
| | 24.5 | புள்ளியியல் பகுப்பாய்வு மென்பொருள் | 68 |
| | 24.6 | வரி விவர அறிக்கைகள் மீது கூர்ந்தாய்வு | 69 |
| | 24.7 | அழைப்பு மையம் | 70 |
| | 24.8 | தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை வணிகவரித் துறையின் ஆய்வில் ஈடுபடுத்துதல் | 71 |
| | 24.9 | ஜிஎஸ்டி பிரைம் மென்பொருள் (GST PRIME) | 72 |
| | 24.10 | எனது விலைப்பட்டி – எனது உரிமை | 73 |

| வ. எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| | 24.11 | சுற்றும்படைக்கான கட்டுப்பாட்டு அறை | 74 |
| | 24.12 | பிற இணைய வழி சேவைகள் | 75 |
| 25 | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள் | | 75 |
| 26 | வணிகவரி அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டுதல் மற்றும் புனரமைப்பு | | 76 |
| 27 | 2022–2023–ஆம் ஆண்டில் வணிகவரித் துறையில் மேற்கொள்ளப்பட்ட பிற புதிய முயற்சிகள் | | 77 |
| | 27.1 | வணிகவரித் துறையின் மறுசீரமைப்பு – உதவியாளர் நிலையில் உள்ள 1000 பணியிடங்களை தரம் உயர்த்துதல் | 77 |
| | 27.2 | ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணையாக குறைந்தபட்சம் ஒரு வணிகவரி மாவட்டம் உருவாக்கம் | 78 |
| | 27.3 | வரி ஏய்ப்பினைத் தடுக்க உதவுபவர்களுக்கு வெகுமதி | 79 |
| | 27.4 | வரி ஆய்வுக் குழு | 79 |
| 28 | முடிவுரை | | 80 |

# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

# மானியக் கோரிக்கை எண். 10

# வணிகவரிகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு 2023-2024

## 1. முன்னுரை

வணிகவரித் துறையானது, வரி நிர்வாகத்தில் புதுமையான மற்றும் அறிவியல் பூர்வமான உத்திகளைப் பெருமளவில் பயன்படுத்துவதன் மூலம், மாநில அரசிற்கு வருவாய் ஈட்டுவதில் முன்னோடியாக விளங்குகிறது. வணிகவரித் துறையின் மூலம் ஈட்டப்படும் வருவாயானது, தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்த பல திட்டங்களை செயல்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுவதால் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

01.07.2017 முதல் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் வரி மேல் வரி விதிக்கப்படுவதைத் தடுப்பதுடன், மதிப்புச் சங்கிலியில் நுகர்வு சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவ்விரண்டின்

வழங்கல்கள் மீதான உள்ளீட்டு வரி வரவு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்கிறது.

இத்துறை, வரி நிர்வாகத்தில் தொழில் நடத்துவதற்கான எளிய நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வரி செலுத்துவதில் தன்னார்வ இணக்கத்தை ஊக்குவித்து, அதன் மூலம் மாநிலத்தை முதலீடுகளின் கேந்திரமாக உருவாக்குவதில் உதவுகிறது.

## 2. வணிகவரித் துறையின் செயல்பாடுகள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 ஆகிய சட்டங்களை அமல்படுத்துவது வணிகவரித் துறையின் முக்கிய செயல்பாடாகும்.

அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் காணப்படும் மாநில பட்டியலின் வரிசை எண் 54–இல் உள்ளடக்கப்பட்ட பெட்ரோலிய கச்சா எண்ணெய், அதிவேக டீசல், மோட்டார் ஸ்பிரிட் (பொதுவாக பெட்ரோல் என்றழைக்கப்படுவது), இயற்கை எரிவாயு, வானூர்திக்கான எரிபொருள் மற்றும் மனித நுகர்வுக்கான மதுபானம் ஆகிய ஆறு பொருட்கள்

மட்டும் தொடர்ந்து தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

மேலும், 30.06.2017 வரை நடைமுறையில் இருந்த கீழ்காணும் முந்தைய சட்டங்கள் தொடர்பான பணியையும் வணிகவரித் துறை மேற்கொண்டு வருகிறது.

1. தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006
2. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
3. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பரங்கள் வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
9. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம், 1983
10. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

## 3. வணிகவரித் துறையின் மொத்த வருவாய் வசூல் விவரங்கள்

வணிகவரித் துறை, கடந்த ஆறு ஆண்டுகளில் வசூலித்த இழப்பீட்டுத் தொகை உள்ளடக்கிய மொத்த வருவாய் விவரங்கள் கீழ்கண்டவாறு:-

| ஆண்டு | மொத்த வருவாய் வசூல் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி சதவிகிதம் (%) |
|---|---|---|
| 2017-2018 | 73,148.28 | 8.24 |
| 2018-2019 | 87,905.26 | 20.17 |
| 2019-2020 | 95,086.93 | 8.17 |
| 2020-2021 | 96,209.23 | 1.18 |
| 2021-2022 | 1,04,970.06 | 9.11 |
| 2022-2023 | 1,33,540.70 | 27.22 |

## 4. வணிகவரித் துறையின் நிர்வாக செலவினம்

பல்வேறு தலைப்புகளின் கீழ் வணிகவரித் துறையின் மொத்த நிர்வாக செலவினம் கீழ்காணும் பட்டியலின்படி, அரை சதவிகிதத்திற்கும் குறைவாகவே தொடர்ந்து இருந்து வருகிறது:-

| ஆண்டு | வருவாய் வரவுகள் (ரூபாய் கோடியில்) | செலவினத் தொகை (ரூபாய் கோடியில்) | வருவாயில் செலவினத்தின் சதவிகிதம் (%) |
|---|---|---|---|
| 2020-2021 | 96,209.23 | 459.39 | 0.48 |
| 2021-2022 | 1,04,970.06 | 425.95 | 0.40 |
| 2022-2023 | 1,33,540.70 | 481.64 | 0.36 |

## 5. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஜிஎஸ்டி) அமல்படுத்திய பின்னர் சட்டவாரியான வருவாய் வசூல் விவரங்கள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமல்படுத்தியது முதல் 2022-2023 நிதியாண்டு வரையிலான சட்டவாரியான வருவாய் வசூல் விவரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாதவை** | மதிப்பு கூட்டு வரி & மற்றவைகள் *** | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | ஒருங்கி-ணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் தீர்வு | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் இழப்பீடு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2017-2018 * | 28,554.90 | 3,518.80 | 16,199.93 | 8,706.99 | 632.00 | **57,612.62** |
| 2018-2019 | 42,414.96 | 593.98 | 24,476.56 | 17,268.76 | 3,151.00 | **87.905.26** |
| 2019-2020 | 44,023.19 | 796.53 | 27,117.38 | 14,227.80 | 8,922.03 | **95,086.93** |
| 2020-2021 | 42,982.27 | 393.52 | 23,870.18 | 18,360.44 | 10,602.82 | **96,209.23** |
| 2021-2022 | 48,401.21 | 416.74 | 29,440.98 | 19,475.33 | 7,235.80 | **1,04,970.06** |
| 2022-2023 | 58,234.92 | 896.96 | 36,353.12 | 21,840.87 | 16,214.83 | **1,33,540.70** |

* 01.07.2017 முதல் 31.03.2018 வரை

**தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956-இன் கீழ், மனித நுகர்வுக்கான மதுபானம் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் (பெட்ரோலிய கச்சா எண்ணெய், அதிவேக டீசல், பெட்ரோல், இயற்கை எரிவாயு, வானூர்திக்கான எரிபொருள்

ஆகியவை) மூலமாகப் பெறப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத வருவாயைக் குறிப்பதாகும்.

*** முந்தைய சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய்.

## 6. துறையின் நிர்வாக கட்டமைப்பு

இத்துறையின் தலைவராக வணிகவரி ஆணையர் உள்ளார். ஒரு மூத்த கூடுதல் ஆணையர், ஐந்து கூடுதல் ஆணையர்கள், ஓர் இணை ஆணையர் (நிர்வாகம் – இந்திய ஆட்சிப்பணி நிலையில்) மற்றும் பிற அலுவலர்கள் வணிகவரி ஆணையருக்கு உதவியாக உள்ளனர். அரசாணை (நிலை) எண்கள் 14 மற்றும் 15, வணிகவரி மற்றும் பதிவுத் (அ1) துறை, நாள் 28.02.2023–இன்படி வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் புதிதாக இரண்டு கூடுதல் ஆணையர் பணியிடங்கள் உருவாக்குவதற்காக அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நிர்வாக கோட்டப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மேற்முறையீட்டுப் பிரிவு ஆகிய மூன்றும் வணிகவரித் துறையின் முக்கிய நிர்வாகப் பிரிவுகளாகும்.

வணிகவரித் துறையின் ஆட்சி எல்லையானது, 12 நிர்வாக கோட்டங்களாக (அதிக வரிசெலுத்துவோர்

பிரிவு உட்பட) பிரிக்கப்பட்டு இணை ஆணையர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. அரசாணை (நிலை) எண் 21, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 09.03.2023–இன்படி 7 புதிய நிர்வாகக் கோட்டங்கள் உருவாக்குவதற்காக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துணை ஆணையர்கள் தலைமையில் 42 சரகங்கள் / வரிவிதிப்பு மாவட்டங்களையும் உதவி ஆணையர்கள் / வணிகவரி அலுவலர்கள் தலைமையில் 338 வரிவிதிப்பு வட்டங்களையும் உள்ளடக்கி நிர்வாக கோட்டப் பிரிவு இயங்கி வருகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்பற்றப்படும் பல்வேறு மாற்றங்களைக் கருத்தில் கொண்டு உரிய நேரத்தில் சிறப்பான சேவைகளை வரிசெலுத்துவோருக்கு வழங்குவதை உறுதி செய்யும் வகையில் இத்துறையின் நிர்வாக அமைப்பு மறுசீரமைக்கப்பட்டு வருகிறது.

## 7. நிர்வாக கோட்டங்கள்

வரிவிதிப்பு வட்டங்களில், பதிவு, திருப்புத் தொகை, வரி விவர அறிக்கைகள் தாக்கல் செய்வதை

கண்காணித்தல், வரி விவர அறிக்கைகளின் கூர்ந்தாய்வு, வரிவிதிப்பு, இடைமாற்று கால வரவுகள் மற்றும் வரிநிலுவைகளை வசூல் செய்தல் ஆகியவை நிர்வாக கோட்டத்தின் பணிகளாகும். நிர்வாக கோட்ட இணை ஆணையர்கள், உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணைகளை சீராய்வு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். நிர்வாகக் கோட்ட துணை ஆணையர்கள், உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணைகளின் மறு ஆய்வு மற்றும் மேல்முறையீடு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர்.

## 7.1 அதிக வரிசெலுத்துவோர் பிரிவின் செயல்பாடுகள்

மாநில அளவில் அதிக வரிசெலுத்துவோரை நிர்வகிக்கும் பொருட்டு, அதிக வரிசெலுத்துவோர் பிரிவு சென்னையில் இயங்கி வருகிறது. சிறந்த மற்றும் மேம்பட்ட சேவைகளை வழங்கும் பொருட்டு, முதனிலை வகிக்கும் 100 அதிக வரிசெலுத்துவோர் இப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். அதிக வரி செலுத்தும் இந்த 100 பேரில், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் மனித நுகர்வுக்கான மதுபானம் சார்ந்த 14 வணிகர்களும் (இவர்கள் ஜிஎஸ்டி செலுத்துபவர்களாகவும் உள்ளனர்), சரக்குகள் மற்றும்

சேவைகள் வரி மட்டுமே செலுத்தும் 86 வணிகர்களும் உள்ளடங்குவர். அதிக வரிசெலுத்துவோர் பிரிவால் கடந்த இரண்டு ஆண்டுகளில் கீழ்கண்டவாறு வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது:–

| ஆண்டு | அதிக வரி செலுத்துவோர் எண்ணிக்கை | வரியின் தன்மை | மாநில வருவாய் (ரூபாய் கோடியில்) | அதிக வரி செலுத்துவோர் பிரிவின் வருவாய் (ரூபாய் கோடியில்) | மாநில வருவாயில் அதிக வரி செலுத்துவோர் பிரிவின் பங்களிப்பு சதவிகிதம் |
|---|---|---|---|---|---|
| 2021–2022 | 14 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத வரிகள் மற்றும் மதிப்பு கூட்டு வரி | 48,817.95 | 44,458.12 | 91.07 |
| | 86 | மாநில சரக்குகள் (ம) சேவைகள் வரி (மாநில வரம்பிற்குட்பட்ட வரி செலுத்துவோர் மட்டும்) | 16,709.25 | 3,546.26 | 21.22 |
| | **100** | **மொத்தம்** | **65,527.20** | **48,004.38** | **73.25** |
| 2022–2023 | 14 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத வரிகள் மற்றும் மதிப்பு கூட்டு வரி | 59,131.88 | 53,009.74 | 89.65 |
| | 86 | மாநில சரக்குகள் (ம) சேவைகள் வரி (மாநில வரம்பிற்குட்பட்ட வரி செலுத்துவோர் மட்டும்) | 21,020.02 | 5,989.15 | 28.49 |
| | **100** | **மொத்தம்** | **80,151.90** | **58,998.89** | **73.61** |

## 8. நுண்ணறிவு கோட்டங்கள்

துறையின் நுண்ணறிவுப் பிரிவு, இணை ஆணையர்கள் தலைமையில் சென்னை–I, சென்னை–II, வேலூர், திருச்சி, மதுரை, சேலம், ஈரோடு, திருநெல்வேலி மற்றும் கோயம்பத்தூர் ஆகிய 9 நுண்ணறிவு கோட்டங்களைக் கொண்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 19, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 09.03.2023–இன்படி 6 புதிய நுண்ணறிவு கோட்டங்கள் உருவாக்குவதற்காக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வரி செலுத்துவோர் பற்றிய தரவு மற்றும் தகவல்களை ஆராய்ந்து புலனாய்வுப் பிரிவுக்கு வழங்க ஏதுவாக நுண்ணறிவுப் பிரிவானது தரவுக் குழு மற்றும் கணக்கெடுப்புக் குழுவைக் கொண்டுள்ளது. மேற்காணும் தரவு மற்றும் தகவல்களோடு நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்களின் அறிக்கைகளின் அடிப்படையில் புலனாய்வுக் கோப்புகள் புலனாய்வுப் பிரிவால் துவக்கப்படுகின்றன. தரவுக் குழு மற்றும் கணக்கெடுப்புக் குழு ஆகியவை துணை ஆணையர் (புலனாய்வு) / உதவி ஆணையர் (புலனாய்வு)–இன் கீழ் இயங்குகின்றன.

## 8.1 நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் வரிசெலுத்துவோர் சுய மதிப்பீடு அடிப்படையில் வரி செலுத்துகின்றனர். எனினும், வரி ஏய்ப்பு இருப்பதாக நம்பப்படும் நேர்வுகளில், வரிசெலுத்துவோரின் வணிக நடவடிக்கைகள் தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ள இச்சட்டத்தில் வழிவகைகள் உள்ளன.

முறையான அங்கீகாரத்தின் அடிப்படையிலும் ஆணையரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழும் நுண்ணறிவுப் பிரிவின் நடவடிக்கைகளை தடையற்ற மற்றும் திறமையான முறையில் மேற்கொள்ளுமாறு அரசு வலியுறுத்துகிறது. பாரபட்சமான புலனாய்வு மற்றும் துறைக்கு அவப்பெயர் ஏற்படுவது போன்ற நிகழ்வுகளைத் தவிர்க்கவும் வலியுறுத்தப்படுகிறது.

வரி ஏய்ப்பு செய்வோரின் பல்வேறு வகையான வரி ஏய்ப்பு செயல்பாடுகளை தனது ஆய்வுகளின் மூலம் நுண்ணறிவுப் பிரிவு வெளிக்கொணர்ந்துள்ளது.

மேற்கூறியவற்றுடன், வரி ஏய்ப்பு நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் சரக்கு

போக்குவரத்தினைக் கண்காணிக்க வாகன தணிக்கையும் இப்பிரிவின் சுற்றும் படைகளால் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த இரண்டாண்டுகளில் சுற்றும் படைகளின் செயல்பாட்டின் விவரம் பின்வருமாறு :–

| ஆண்டு | சரிபார்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | சரிபார்க்கப்பட்ட மின்னணு வழிப்பட்டிகளின் எண்ணிக்கை | குற்றப் பதிவுகளின் எண்ணிக்கை | வசூலிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 2021–2022 | 5,39,788 | 6,82,293 | 10,902 | 73.22 |
| 2022–2023 | 8,77,012 | 9,50,297 | 27,847 | 222.49 |
| வளர்ச்சி விகிதம் | 62.47 | 39.28 | 155.43 | 203.87 |

## 8.2 ஆணையரக புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள்

வணிகவரி ஆணையர் அலுவலகத்திலுள்ள புலனாய்வுப் பிரிவு, நுண்ணறிவுக் கோட்டங்களிலிருந்து பெறப்படும் புலனாய்வு கோப்புகளை ஆய்வு செய்கிறது. ஒப்புதல் அளிக்கப்பட்ட புலனாய்வு கோப்புகள் நுண்ணறிவுக் கோட்டங்களுக்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்படுகின்றன. ஒப்புதலளிக்க தகுதியற்ற புலனாய்வு கோப்புகள்,

மேல்நடவடிக்கைக்காக உரிய அலுவலருக்கும் அல்லது விரிவான கூர்ந்தாய்வு மேற்கொள்வதற்காக தொடர்புடைய நுண்ணறிவுக் கோட்டத்திற்கும் அனுப்பப்படுகின்றன.

மேலும், தரமான புலனாய்வு கோப்புகளை உருவாக்கவும் மற்றும் ஆய்வின் தரத்தினை மேம்படுத்தவும், 14 இடர் அளவுருக்கள் (risk parameters) மற்றும் மதிப்பு புள்ளிகள் (weightage points) துறையால் கண்டறியப்பட்டுள்ளன.

வரி ஏய்ப்பைத் தடுக்கவும் நுண்ணறிவுப் பிரிவின் மூலம் பெறப்படும் வருவாயைப் பெருக்கவும் புலனாய்வுக் கோப்புகளின் உருவாக்கத்தின் எண்ணிக்கையும் மாதந்தோறும் நடத்தப்படும் ஆய்வுகளின் எண்ணிக்கையும் 25.10.2022 முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன :–

| ஆண்டு | மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை | வசூலிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2021–2022 | 1,810 | 69.77 |
| 2022–2023 | 3,809 | 510.03 |
| உயர்வு % | 110.44 | 631.02 |

## 8.3 ஆணையரக நுண்ணறிவுப் பிரிவின் இதர நடவடிக்கைகள்

திருப்புத் தொகை கோரும் 1.028 வரிசெலுத்துவோரின் கணக்குகள் 2021–2022 மற்றும் 2022–2023–ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் தணிக்கைக்கு தேர்வு செய்யப்பட்டன. இவற்றில், 1.023 இனங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு, நடப்பு ஆண்டு 2022–2023–இல் ரூ.40.36 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2023 மாதத்தில், அதிக வரிசெலுத்துவோர் பிரிவிலிருந்து 22 இனங்களும் பிற நிர்வாக கோட்டங்களிலிருந்து 4.116 இனங்களும் ஜிஎஸ்டி தணிக்கைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேலும், மதிப்பு கூட்டு வரிச் சட்ட தணிக்கைக்காக அதிக வரிசெலுத்துவோர் பிரிவிலிருந்து 8 இனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், வரி செலுத்துவதிலுள்ள முறைகேடுகளைக் கண்டறியும் தணிக்கையை

மேற்கொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் வரி செலுத்துவதில் ஏற்படுகின்ற குறைபாடுகள் குறித்து வரி செலுத்துவோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பான விவரங்களை உள்ளடக்கி 'சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தணிக்கை கையேடு' வெளியிடப்பட்டுள்ளது. இக்கையேடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் தொழில்முறையான மற்றும் வெளிப்படையான தணிக்கை மேற்கொள்வதில் வணிகவரித் துறை அலுவலர்களுக்கு வழிகாட்டும் விதமாக பயனுள்ள வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 8.4 சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் புதிய பதிவுகளின் சரிபார்ப்பு

போலி பட்டியல் தயாரிப்போரை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பொருட்டு, புதிதாக பதிவு பெற்ற அனைத்து வரி செலுத்துவோர் மற்றும் அவர்களது வணிக இடங்கள் 01.06.2021 முதல் சரிபார்க்கப்பட்டு வருகிறது. 2022–2023–ஆம் ஆண்டில், மொத்தம் 1,966 புதிதாகப் பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துவோர் தங்களால் அறிவிக்கப்பட்ட வணிக இடங்களில் இல்லாதது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில், சரக்குகள் மற்றும்

சேவைகள் வரிச் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி 1,386 பதிவுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

**8.5 போலி பட்டியல் தயாரிப்போரை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

சுழற்சியான அல்லது தொடர் வணிக முறையின் கீழ் நெருங்கிய குழுவிற்குள் சரக்குகள் வழங்கப்படாமல் விற்பனை விலைப்பட்டியல்கள் மட்டுமே வழங்கி செயற்கையான வர்த்தக பரிவர்த்தனையை உருவாக்கும் மோசடி நடவடிக்கையே போலி பட்டியல் வணிக நடவடிக்கை ஆகும்.

2022–2023–ஆம் ஆண்டில், மொத்தம் 712 போலி பட்டியல் தயாரிப்போர் அடையாளம் கண்டறியப்பட்டு, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்தகைய போலி பட்டியல் வணிக நடவடிக்கையால் பயனடைந்தோர் குறித்த விவரங்களும் உள்ளீட்டு வரி வரவு துய்ப்பதைத் தடுப்பதற்காக உரிய அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

2022–2023–ஆம் ஆண்டில், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017, பிரிவு 69(1)–இன் கீழ், 3 இனங்களில் கைது நடவடிக்கை மேற்கொள்ள வணிகவரி ஆணையரால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 2 இனங்களில் குற்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

2022–2023–ஆம் ஆண்டில், 12 வரி ஏய்ப்பு இனங்களில் வங்கிக் கணக்குகள் / சொத்துகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன.

### 8.6 போலி பட்டியல் குறித்து பொருளாதார குற்றப் பிரிவின் கீழ் நடவடிக்கை

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, போலி பட்டியல் குறித்த கடுமையான நடவடிக்கை பொருளாதார குற்றப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி, ரூபாய் 5 கோடி மற்றும் அதற்கு மேல் வருவாய் இழப்புள்ள போலி பட்டியல் வணிக குற்ற இனங்களை, ஒவ்வொரு வழக்கின் தன்மை அடிப்படையில், மேல்நடவடிக்கை எடுப்பதற்காக காவல் துறையின் கீழ் இயங்கி வரும் பொருளாதார குற்றப் பிரிவுக்கு பரிந்துரைக்கலாம் என்று அரசின் உள்துறை தெரிவித்துள்ளது.

01.07.2017 முதல் 31.03.2022 வரையிலான கால கட்டத்தில், ரூபாய் 5 கோடி மற்றும் அதற்கு மேல் போலி வரி விலைப்பட்டியல் தயாரிப்பில் ஈடுபட்ட வரி செலுத்துவோர் மற்றும் உள்ளீட்டு வரி வரவினை மோசடியாக துய்த்து வரி ஏய்ப்பு செய்த பயனாளிகள் ஆகியோரில் 6 இனங்கள், காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர், பொருளாதார குற்றப் பிரிவிற்கு தொடர் நடவடிக்கைக்காகவும் அரசுக்கு வரவேண்டிய வருவாயினை வசூல் செய்வதற்காகவும் 2023 பிப்ரவரி மாதத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், ரூபாய் 5 கோடி மற்றும் அதற்கு மேல் வரி ஏய்ப்பு செய்த அல்லது தவறாக உள்ளீட்டு வரி வரவினைக் கோரிய அல்லது துய்த்த 217 போலி பட்டியல் தயாரித்தவர்கள் மற்றும் 49 பயனாளிகளின் மீது குற்ற நடவடிக்கை எடுத்து குற்ற வழக்குகள் தாக்கல் செய்யும் பணியில் நுண்ணறிவு கோட்ட இணை ஆணையர்கள் பொருளாதார குற்றப் பிரிவு காவல்துறை கூடுதல் இயக்குநருடன் இணைந்து ஈடுபட்டுள்ளனர்.

## 8.7 மின்னணு வழிப்பட்டியினை ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பம் (RFID) மற்றும் வேகச் சீட்டு (FASTag) முறையுடன் ஒருங்கிணைத்தல்

மின்னணு வழிப்பட்டி, ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பம் (RFID) மற்றும் வேகச் சீட்டு (FASTag) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பானது, வணிகத்தில் மின்னணு வழிப்பட்டி தவறாமல் கடைபிடிக்கப்படுகிறதா என நிகழ்முறையில் கண்காணிக்க வரிவிதிப்பு அலுவலர்களுக்கு உதவுகிறது. மின்னணு வழிப்பட்டிகளின் மறுசுழற்சி, மின்னணு வழிப்பட்டி உருவாக்காமை போன்ற இனங்களை நிகழ்நேரத்திலேயே கண்டறிந்து வருவாய் இழப்பைத் தடுக்க இம்முறை பயனுள்ளதாக உள்ளது.

இது தொடர்பான மேலாண்மை தகவல் அமைப்பு அறிக்கை துறையின் உரிய அலுவலர்களுக்கு வழங்கப்பெறுகிறது. போலி வணிக மோசடி பரிவர்த்தனைகளைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் தணிக்கை மற்றும் நுண்ணறிவுப் பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் இவ்வறிக்கைகளைப் பயன்படுத்துகின்றனர்.

வரி செலுத்துவதை மேம்படுத்தும் நோக்கில், பதிவு பெற்ற வரி செலுத்துவோர் GSTR-3B வரி விவர அறிக்கையினை இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக தாக்கல் செய்யவில்லையெனில், அவர்களுக்கு மின்னணு வழிப்பட்டி உருவாக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

## 8.8 சோதனை கொள்முதல்

விலைப்பட்டி/வழங்குகைச் சீட்டு வழங்கும் நடைமுறையை பழக்கப்படுத்தவும் வரி செலுத்த வேண்டிய நபர் வரி செலுத்துவதை உறுதி செய்திடவும் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, பிரிவு 67(12)–இன்படி சோதனை கொள்முதல் மேற்கொள்ளப்படுகின்றது.

சோதனை கொள்முதல் மேற்கொள்வதற்காக ஒவ்வொரு நிர்வாக மற்றும் நுண்ணறிவு கோட்ட இணை ஆணையர்களுக்கும், தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20 இலட்சம் நிரந்தர முன்பணத் தொகை, அரசாணை (2ப) எண் 57, வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 25.07.2022–இன்படி வழங்கப்பட்டுள்ளது.

2022–2023–ஆம் ஆண்டில் நுண்ணறிவுப் பிரிவு கோட்டங்களால் 385 சோதனை கொள்முதல் மேற்கொள்ளப்பட்டது; 248 இனங்களில் வரி விலைப்பட்டியல் வழங்கப்படாதது கண்டறியப்பட்டது; ரூ.49.50 இலட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டது,

இதே காலத்தில், நிர்வாக கோட்டங்களால், 3,032 சோதனை கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு, 1,774 இனங்களில் வரி விலைப்பட்டியல் வழங்கப்படாதது கண்டறியப்பட்டு, ரூ.351.50 இலட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

## 9. மேல்முறையீட்டுப் பிரிவு

முந்தைய சட்டங்களின் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீதான மேல்முறையீடு, முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பான மேல்முறையீட்டு துணை ஆணையர் / மேல்முறையீட்டு இணை ஆணையரிடம் தாக்கல் செய்யப்படுகிறது. இச்சட்டங்களின் கீழ் பிறப்பிக்கப்படும் மேல்முறையீட்டு ஆணைகளின் மீதான இரண்டாவது மேல்முறையீட்டு அதிகார அமைப்பாக, விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் விளங்குகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீதான முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு தனியாக செயல்படுகிறது. இரண்டாவது மேல்முறையீட்டு அதிகார அமைப்பான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 9.1 முந்தைய சட்டங்களின் கீழ் முதல் மேல்முறையீடு

உதவி ஆணையர் நிலை வரையிலுள்ள வரி விதிப்பு அலுவலர்களால், தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பாக மேல்முறையீட்டு துணை ஆணையர் உள்ளார். அதிக வரிசெலுத்துவோர் பிரிவில் துணை ஆணையர்கள் நிலையில் உள்ள வரி விதிப்பு அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளைப் பொருத்து, முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பாக மேல்முறையீட்டு இணை ஆணையர் உள்ளார்.

முந்தைய சட்டங்களின் கீழான முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் நிர்வாக கட்டுபாட்டு அதிகாரம் தமிழ்நாடு வணிகவரி மேல்முறையீட்டு தீர்ப்பாய தலைவரிடம் உள்ளது. முதல் மேல்முறையீட்டு அமைப்பின் முன், வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் உதவி ஆணையர் நிலையில் உள்ள துறை பிரதிநிதி மூலம் துறையால் எதிர்கொள்ளப்படுகின்றன.

முந்தைய சட்டங்களின் கீழ், முதல் மேல்முறையீட்டு அமைப்பின் முன் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

| 01.04.2022 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள மேல்முறையீடுகளின் எண்ணிக்கை | 2022–23 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டவை | மொத்தம் | முடித்து வைக்கப்பட்ட மேல் முறையீடுகள் | நிலுவை (31.03.2023 அன்றைய நிலையில்) |
|---|---|---|---|---|
| 3,796 | 837 | 4,633 | 1,766 | 2,867 |

## 9.2 தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 –இன் கீழ் முதல் மேல்முறையீடு

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் உதவி ஆணையர் நிலை வரையில் உள்ள உரிய அலுவலர்களால்

பிறப்பிக்கப்படும் ஆணைகள் / முடிவுகளின் தொடர்பான முதல் மேல்முறையீட்டு அமைப்பாக மேல்முறையீட்டு துணை ஆணையர் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மேல்முறையீடு) செயல்படுகிறார். அதிக வரி செலுத்துவோர் பிரிவில் துணை ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் தொடர்பான முதல் மேல்முறையீட்டு அமைப்பாக மேல்முறையீட்டு இணை ஆணையர் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மேல்முறையீடு) செயல்படுகிறது.

தற்போது. ஆறு மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மேல்முறையீடு) ஒரு மேல்முறையீட்டு இணை ஆணையரும் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மேல்முறையீடு) உள்ளனர். சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் முதல் மேல்முறையீட்டு அமைப்பில் உதவி ஆணையர் நிலையில் உள்ள அலுவலர் துறையின் பிரதிநிதியாக உள்ளார்.

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் முன் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

| 01.04.2022 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள மேல்முறையீடுகள் | 2022-2023 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள் | மொத்தம் | முடித்து வைக்கப்பட்ட மேல் முறையீடுகள் | நிலுவை (31.03.2023 அன்றைய நிலையில்) |
|---|---|---|---|---|
| 1,776 | 5,045 | 6,821 | 2,576 | 4,245 |

## 9.3 முந்தைய சட்டங்களின் கீழ் இரண்டாவது மேல்முறையீடு

தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளான மேல்முறையீட்டு துணை ஆணையர் அல்லது மேல்முறையீட்டு இணை ஆணையரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீதான இரண்டாவது மேல் முறையீட்டினை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாணையத்தின் முன் தாக்கல் செய்யலாம். இதன் முதன்மை அமர்வு சென்னையிலும் கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் செயல்படுகின்றன.

முதன்மை அமர்வு, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய தலைவரின் தலைமையில் செயல்படுகிறது. இவ்வமர்வில் இரண்டு உறுப்பினர்கள் கூடுதலாக உள்ளனர். ஒருவர், கூடுதல் ஆணையர் நிலைக்குக் குறையாத மாநில அரசின் வணிகவரித்

துறையின் அலுவலராகவும் மற்றொருவர், இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணியிலுள்ள அலுவலர் அல்லது இணை ஆணையர் நிலைக்கு குறையாத வருமான வரித்துறை அலுவலர் அல்லது மத்திய கலால் துறை அலுவலர் அல்லது சுங்கத்துறை அலுவலர் அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அலுவலர் அல்லது வெளி நபராக இருக்கும் பட்சத்தில் பட்டய கணக்கராக ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ள இந்திய பட்டய கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் அல்லது செலவு மற்றும் பணி கணக்காளராக ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ள இந்திய செலவு மற்றும் பணிக்கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் கூடுதல் அமர்வானது சார்நிலை நீதிபதி நிலையில் ஒரு நீதித்துறை உறுப்பினரையும் இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக ஒரு கூடுதல் துறை உறுப்பினரையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில், மாநிலத்தின் சார்பில், இணை ஆணையர் மற்றும்

துணை ஆணையர், முறையே மாநில பிரதிநிதி மற்றும் கூடுதல் மாநில பிரதிநிதியாக செயல்படுகின்றனர்.

விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் முடித்து வைக்கப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

| 01.04.2022 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள மேல்முறையீடுகள் | 2022–2023 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள் | மொத்தம் | முடித்து வைக்கப்பட்ட மேல் முறையீடுகள் | நிலுவை (31.03.2023 அன்றைய நிலையில்) |
|---|---|---|---|---|
| 6,863 | 731 | 7,594 | 674 | 6,920 |

## 9.4 சட்டப்பிரிவின் பணிகள்

வணிகர்கள் மற்றும் துறையால் வரி பொருண்மைகள் தொடர்பாக, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனுக்கள், நீதிப்பேராணை மீதான மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் சிறப்பு விடுப்பு மனுக்கள் சட்டப் பிரிவினால் கண்காணிக்கப்படுகின்றன. முந்தைய சட்டங்களின் தொடர்பான உறுதி நீதிப்பேராணைகளில், எதிர்வாத உரைகளுக்கு ஒப்புதல் வழங்குவதையும் இப்பிரிவு

கண்காணிக்கிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான இனங்களில் தாக்கல் செய்யப்படவேண்டிய எதிர்வாத உரைகளுக்கு வணிகவரி ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை திறம்பட முடிவுக்கு கொண்டுவரும் வகையில் சட்ட வல்லுனர்களை ஒருங்கிணைத்து கண்காணிக்கும் பணியை சட்டப்பிரிவு மேற்கொள்கிறது. சட்ட அலுவலர்களுக்கான கட்டண ஒப்புகையும் இப்பிரிவில் கையாளப்படுகிறது.

உயர் நீதிமன்றத்தின் ஆணைகளை உரிய முறையில் செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதையும் மேல்முறையீடு செய்ய உரிய முகாந்திரம் உள்ள வழக்குகளில் நீதிப்பேராணை மேல்முறையீடு / சீராய்வு மற்றும் சிறப்பு விடுப்பு மனுக்கள் துறையால் தாக்கல் செய்யப்படுவதையும் சட்டப்பிரிவு உறுதி செய்கிறது.

அனைத்து வரிவிதிப்பு மற்றும் வழக்கு தீர்ப்பளிக்கும் அலுவலர்கள் அனைத்து நீதிமுறை சார்பு செயல்முறைகளில் இயற்கை நீதியின் கோட்பாடுகளை மிகுந்த கவனத்துடன் பின்பற்ற வேண்டும் எனவும்

எவ்வித குறைபாடும் இன்றி நீதித்துறை ஆய்வுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் விளக்கமான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி சட்டப்பிரிவினால் 2022–ஆம் ஆண்டில் சுற்றறிக்கை வழங்கப்பட்டது. அனைத்து கோட்டங்களிலும் உள்ள அலுவலர்களுக்கு இயற்கை நீதியின் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பது தொடர்பாக அனைத்து கோட்டங்களிலும் ஆய்வு கூட்டங்கள் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

## 10. தணிக்கை

வழக்கு தீர்ப்பு அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் அல்லது முடிவுகளின் மீதான மறுஆய்வு / உள்தணிக்கையானது துறையின் மறுஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவினாலும் காலமுறை அளவில் மாநில கணக்காயராலும் மேற்கொள்ளப்படுகிறது.

### 10.1 மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படும் தணிக்கை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் வரிவிதிப்புகள் / முடிவுகள் / வருவாய் வசூல் / திருப்புத் தொகை மீது மாநில கணக்காயரால் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், செயல்திறன் தணிக்கையுடன், துறையின் பல்வகையான நடவடிக்கைகள் மீதான கருப்பொருள் சார்ந்த தணிக்கையும் மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை அறிக்கையில் சேர்ப்பதற்காக பொருள் சார்ந்த இணக்கத் தணிக்கை (Subject Specific Compliance Audit) போன்ற சிறப்பு தலைப்புகளையும் மாநில கணக்காயர் மேற்கொள்கிறார்.

நிலுவையிலுள்ள தணிக்கைப் பத்திகளை தீர்வு செய்யும் பொருட்டு மாநில கணக்காயரால் வணிகவரித் துறை அலுவலர்களோடு இணைந்து கூட்டு அமர்வுகள் காலமுறை அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

மாநில கணக்காயர் தணிக்கைப் பத்திகள் மீதான தீர்வுகள் குறித்த முன்னேற்றம் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| நிலுவையிலுள்ள மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கை (01.04.2022 அன்றுள்ள ஆரம்ப நிலுவை) | | 18,602 |
| 31.03.2023 வரை பெறப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கை | | 834 |
| | மொத்தம் | 19,436 |
| அ) சென்னை சரகங்களில் (சரகம்– IV,V, VI, VII, VIII, X, XI & XII) மாநில கணக்காயரின் தணிக்கைக் குழுவுடன் கூட்டு அமர்வில் தீர்வு செய்யப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கை | 2,072 | |
| ஆ) 31.03.2023 வரை நிவர்த்தி செய்யப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கை பத்திகளின் எண்ணிக்கை | 2,718 | |
| இ) 01.04.2022 முதல் 31.03.2023 வரை தீர்வு செய்யப்பட்ட தணிக்கை பத்திகளின் மொத்த எண்ணிக்கை | 4,790 | 4,790 |
| | நிலுவை | 14,646 |

நிலுவையிலுள்ள 14,646 பத்திகள் அனைத்திற்கும் பதிலறிக்கைகள் மாநில கணக்காயருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## 10.2 தணிக்கைக்கென தனி பிரிவு உருவாக்குதல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அமல்படுத்தப்பட்டபின், வரிவிதிப்பு முறை மற்றும் துறை அலுவலர்கள் மற்றும் வரிசெலுத்துவோர் இடையேயான இணக்க செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, மாநில கணக்காயர் ஆண்டு

தணிக்கை முறைக்குப் பதிலாக, தணிக்கை முறையை கீழ்கண்டவாறு மாற்றியமைத்துள்ளார்:–

- கருப்பொருள் சார்ந்த தணிக்கை
- சிறப்பு தணிக்கை
- விரிவான தணிக்கை
- நடைமுறை சார்ந்த தணிக்கை

முந்தைய தணிக்கை அறிக்கைகளுடன் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தணிக்கை இனங்களும் தக்க முறையில் கண்காணிக்கப்பட வேண்டியுள்ளதால், தனியாக ஒரு தணிக்கைப் பிரிவு உருவாக்கப்படுவது அவசியமாகிறது. எனவே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத பிரிவினை இரண்டாகப் பிரித்து, கூடுதல் ஆணையர் தலைமையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் முந்தைய சட்டங்களின் கீழ் மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகளை மட்டும் பிரத்தியேகமாக கையாளுவதற்காக தணிக்கைப் பிரிவு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசாணை (நிலை) எண் 15, வணிகவரி மற்றும் பதிவுத் (எப்) துறை, நாள் 28.02.2023–இன்படி அரசு ஒப்புதல் அளித்துள்ளது,

## 10.3 மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் அதிகார வரம்பிற்குட்பட்ட உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பு ஆணைகள் மற்றும் முடிவுகளின் மீது மறு ஆய்வு செய்யும் அதிகாரம் கோட்டங்களின் நிர்வாகப் பிரிவு துணை ஆணையர்களுக்கும் நுண்ணறிவுப் பிரிவு துணை ஆணையர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியில் துணை ஆணையர்களுக்கு உதவி ஆணையர்கள் (மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு) உதவி புரிகின்றனர்.

மறு ஆய்வின் அடிப்படையில், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, பிரிவு 107–இன்படி மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடம் துறையால் மேல்முறையீடு செய்யப்படுகிறது. ஆறு மாத காலத்திற்குள் இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட வேண்டும். குறித்த காலத்திற்குள் மேல்முறையீடு செய்யப்படாத இனங்களில், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, பிரிவு 108–இன் கீழ் உரிய கோட்ட இணை ஆணையர்களால் சீராய்வு மேற்கொள்ள இயலும்.

மேலும், முந்தைய சட்டங்களின் கீழ் வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் சீராய்வு மனுக்கள் மீது கூடுதல் ஆணையரால் உரிய விசாரணை மேற்கொண்டு உரிய சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

வணிகர்களால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுக்கள் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :-

| 01.04.2022 அன்று நிலுவை | 2022–2023– இல் தாக்கல் செய்யப் பட்டவை | மொத்தம் | ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவை | நிலுவை (31.03.2023 வரை) |
|---|---|---|---|---|
| 1,130 | 41 | 1,171 | 414 | 757 |

நொடிப்பு நிலை மற்றும் நொடிந்தவர் நெறித் தொகுப்பு, 2016 அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, வணிகர்களின் நொடிப்பு நிலை தீர்மான செயல்முறை அல்லது தொழில் நிறுவன கலைப்புக்கான செயல்முறை தொடர்பான வணிகவரித் துறையின் கோரிக்கையானது தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் (National Company Law Tribunal) முன் தாக்கல் செய்யப்படுகிறது. இக்கோரிக்கை மனுக்கள் தாக்கல்,

அவற்றின் ஏற்பு அல்லது அம்மனுக்களின் நிராகரிப்பு மற்றும் நிராகரிக்கப்படும் இனங்களில் இடைநிலை விண்ணப்பம் (Interlocutory Application) தாக்கல் செய்தல் ஆகிய பணிகள் மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவினால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு வணிகவரி தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீது மறுஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அதன் அடிப்படையில் அவற்றைப் பதிவு செய்வது அல்லது உயர் நீதிமன்றத்தில் வரிவழக்காக மேல்முறையீடு செய்வது குறித்தும் முடிவெடுக்கப்படுகிறது. உயர் நீதிமன்ற ஆணைகளில் சட்டம் குறித்து வினா எழும் இனங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. சரக்கு மாற்றம் (Stock Transfer) மற்றும் சரக்கு மாற்று விற்பனை (Consignment Sales) தொடர்பாக தீர்ப்பாயத்தால் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஆணைகளை சீராய்வு செய்து மத்திய விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் உரிய இனங்களில் மேல்முறையீடு தாக்கல் செய்ய முடிவெடுக்கப்படுகிறது.

உயர் நீதிமன்ற மற்றும் தீர்ப்பாய ஆணைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

| ஆண்டு | பதிவு செய்யப்பட்டவை | வரிவழக்கு தாக்கல் செய்யப்பட்டவை |
|---|---|---|
| 2022-2023 | 412 | 48 |

## 11. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

துறை அலுவலர்களின் பணித் திறனாய்வினை மேற்கொள்வதற்காக பின்வரும் மாதாந்திர அறிக்கைகளை புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு தயாரிக்கிறது:–

1. நிர்வாக கோட்டங்களுக்கான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி புள்ளியியல் அறிக்கை
2. நிர்வாக கோட்டங்களுக்கான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாதவை குறித்த புள்ளியியல் அறிக்கை
3. துறையின் நுண்ணறிவுப் பிரிவின் நுண்ணறிவு நடவடிக்கைகள் குறித்த புள்ளியியல் அறிக்கை

துறையின் ஒட்டு மொத்த பணிகள், நிர்வாக படிநிலைகள் மற்றும் இன்றியமையாத செயல்பாடுகளை விளக்கும் வகையில் 'வணிகவரித் துறை – நிர்வாக அறிக்கை'–யை புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு 2022–2023–ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

## 12. வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் பயிற்சிகள்

வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் 1982–ஆம் ஆண்டு முதல் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இணை ஆணையர் பணி நிலையில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையில் இப்பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. வணிகவரித் துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் 'பணியிடைப் பயிற்சி' மற்றும் 'புத்தாக்கப் பயிற்சி' அளிப்பது இந்த பயிற்சி நிலையத்தின் நோக்கமாகும். வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள மண்டல நிலையங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2022–2023–ஆம் ஆண்டில், பயிற்சிக்காக ரூ.96.72 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

துறையின் ஏறத்தாழ 3000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பல்வேறு புத்தாக்கப் பயிற்சி, அறிமுகப் பயிற்சி மற்றும் பயிற்சி பட்டறைகள், சென்னை வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் மற்றும் மண்டல நிலையங்களால் அளிக்கப்பட்டன.

வரிவிதிப்பு சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்த வழக்கமான பயிற்சிகளைத் தவிர, பின்வரும் பயிற்சிகளும் சென்னையில் உள்ள வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டன:–

- துறையில் இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் நிலையில் உள்ள 81 உயர் அலுவலர்களுக்கு மாமல்லபுரத்தில் 'பணியாளர்களின் மேம்பாட்டிற்கான திறன்களை உருவாக்குதல்' குறித்த மூன்று நாட்கள் உறைவிடப் (Residential) பயிற்சி.
- துறையின் 70 தலைமை பயிற்றுநர்களுக்கு 'சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பின்புல அலுவலக செயல்பாடுகளுக்காக ஜிஎஸ்டி மென்பொருள் மாதிரி 1 முறையிலிருந்து ஜிஎஸ்டி மென்பொருள் மாதிரி 2 முறைக்கு இடம்பெயர்தல்' குறித்த பயிற்சி.

- சென்னை கோட்டங்களைச் சார்ந்த புலனாய்வுப் பிரிவின் மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை மாநில வரி அலுவலர்கள் நிலையில் 47 அலுவலர்களுக்கு, Tally, SAP மற்றும் Excel குறித்த மூன்று நாட்கள் பயிற்சி.
- வணிகவரித் துறையின் அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு சென்னை (தெற்கு) மற்றும் (கிழக்கு) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகங்களுடன் இணைந்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைப்பு (IFHRMS) தொடர்பான ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி.
- துறையின் உதவி ஆணையர் நிலையில் உள்ள 150 அலுவலர்களுக்கு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து 'மனித மூலதன வளர்ச்சி' குறித்து மாமல்லபுரத்தில் மூன்று நாட்கள் உறைவிடப் (Residential) பயிற்சி.
- சென்னை மற்றும் வேலூர் கோட்டங்களில் உதவி ஆணையர் நிலை முதல் அலுவலக உதவியாளர் நிலை வரையுள்ள துறையின் 1500 பணியாளர்கள்/ அலுவலர்களுக்கு சென்னை அப்போலோ மருத்துவமனையுடன்

இணைந்து, ஆரோக்கிய ஈடுபாடு (உளவியல், எலும்பியியல் & உடலியக்க மருத்துவம், அவசரநிலை மற்றும் முதலுதவி) பற்றிய ஒருநாள் பயிற்சி.

- தலைமைச் செயலகத்தைச் சார்ந்த 40 பிரிவு அலுவலர்களுக்கான ஒருநாள் கணக்கு பயிற்சி.
- தலைமைச் செயலகத்தின் 78 பிரிவு அலுவலர்களுக்கு மாவட்ட மற்றும் துறை தலைமைகளுக்கான கட்டாய பயிற்சி.

**2022–2023-ஆம் ஆண்டில் பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்ட நிதி மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட விவரங்கள்:-**

| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய்) | செலவழிக்கப்பட்ட தொகை (ரூபாய்) | நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வகுப்புகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 98,21,000 | 94,23,048 | 132 | 864 | 11,029 (நேரடி வகுப்பு மூலமாக) மற்றும் 1,720 (இணைய வகுப்பு மூலமாக) |

## 13. வரிசெலுத்துவோர் ஆலோசனைக் குழு செயல்பாடுகள்

### 13.1 மாநில அளவிலான வரிசெலுத்துவோர் ஆலோசனைக் குழுவின் செயல்பாடுகள்

வணிகர்கள், வணிகர் சங்கங்கள் மற்றும் வர்த்தக சம்மேளங்களின் குறைகள் / முறையீடுகளின் மீது தீர்வு காண்பதற்காக மாநில அளவிலான வரிசெலுத்துவோர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. வணிகவரி ஆணையரின் தலைமையிலான இக்குழு பல்வேறு பங்கு உரிமையாளர்களின் குறைகளுக்கு தேவையான தீர்வுகளை அளிக்கிறது.

### 13.2 மாவட்ட அளவிலான வரிசெலுத்துவோர் ஆலோசனைக் குழு

வரிசெலுத்துவோரின் குறைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்ட அளவிலான வரிசெலுத்துவோர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## 14. புகார் பிரிவின் செயல்பாடுகள்

வணிகர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வணிகவரித் துறை சார்ந்த குறைகளைப் பெற்று,

விரைவாக தீர்வுகாண வணிகவரித் துறை ஆணையர் அலுவலகத்தில் ஒரு 'புகார் பிரிவு' **01.07.2021** முதல் அமைக்கப்பட்டுள்ளது. குறைகளைப் பெறுவதற்காக பிரத்தியேக தொலைபேசி எண் **044–28514250** மற்றும் மின்னஞ்சல் **'ctdpetition@ctd.tn.gov.in'** அளிக்கப் பட்டுள்ளது.

பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள குறைகள் பற்றிய விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:–

| விவரங்கள் | தொலைபேசி மூலமாக பெறப்பட்டவை | மின்னஞ்சல் வழியாக பெறப்பட்டவை |
|---|---|---|
| பெறப்பட்ட புகார்கள் | 739 | 629 |
| முடித்து வைக்கப்பட்ட புகார்கள் | 724 | 447 |
| நிலுவை | 15 | 182 |

## 15. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017–இன் கீழ் வரிவிதிப்பு

முந்தைய சட்டங்களின் கீழ் 30.06.2017 அன்று பதிவுபெற்று செயல்பாட்டிலிருந்த வணிகர்களை 01.07.2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறைக்கு மின்னணு முறை மூலம் இத்துறை வெற்றிகரமாக மாற்றம் செய்துள்ளது.

வரிசெலுத்துவோர் எளிதில் வரி நடைமுறைகளைப் பின்பற்றும் வகையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பல்வேறு சரக்குகள் மற்றும் சேவைகளின் மீதான வரிவிகிதங்கள் பின்வருமாறு:–

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் 5%, 12%, 18% மற்றும் 28% என நான்கு முக்கிய வரிவிகிதங்கள் உள்ளன.
- தங்கம், வெள்ளி, பிளாட்டினம் மற்றும் மதிப்புமிக்க பொருட்களுக்கு 3% வரி.
- பட்டை தீட்டப்படாத, மதிப்புமிக்க மற்றும் இடைமதிப்புடைய கற்களுக்கு 0.25% வரி.
- 01.07.2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஐந்து ஆண்டுகளுக்கு ஈடுசெய்வதற்காக, கார்கள் போன்ற ஆடம்பர பொருட்கள் மற்றும் பான் மசாலா, புகையிலை போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கின்ற

பொருட்கள் மீது இழப்பீட்டு மேல்வரி பல்வேறு விகிதங்களில் விதிக்கப்படுகிறது.

- இறக்குமதி மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சரக்குகள் மற்றும் சேவைகளின் வழங்கல்கள் ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்படுகிறது.
- ஓராண்டில் ரூ.1.50 கோடி வரை மொத்த விற்று கொள்முதல் உள்ள வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், சில நிபந்தனைகளுடன் 1% வரி செலுத்தும் இணக்கவரி முறையை விருப்பத் தேர்வாக செய்து கொள்ளலாம்.
- பொதுவாக, சேவைகள் வழங்குதல் மீது 18% வரி விதிக்கப்படுகிறது. மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமான பணிகள் மீது உள்ளீட்டு வரி வரவு இல்லாமல் 1.5% வரியும், மலிவு விலை அல்லாத அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமான பணிகள் மீது உள்ளீட்டு வரி வரவு இல்லாமல் 7.5% வரியும் விதிக்கப்படுகிறது.

## 16. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் செயல்பாடுகள்

அரசியலமைப்பு (101–ஆவது திருத்த) சட்டம், 2016–இன்படி, நாடு முழுவதும் ஒரே சீரான வரி விகிதத்தை செயல்படுத்துவதற்காக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் அமைக்கப்பட்டது. சட்டமன்றம் கொண்டுள்ள யூனியன் பிரதேசங்கள் உட்பட அனைத்து மாநிலங்களும் ஒன்றிய அரசும் இம்மன்றத்தின் உ.றுப்பினர்களாக உள்ளன. தமிழ்நாடு அரசின் சார்பில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் இம்மன்றத்தில் மாநில உறுப்பினராக உள்ளார்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கான சட்ட மாதிரி முன் வடிவு, அடிநிலை விகிதங்கள் மற்றும் எல்லை விகிதங்கள் உள்ளிட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள், பல்வகையான வரிவிகிதங்கள் அல்லது வரி விலக்குக்கு உட்படும் சரக்குகள் மற்றும் சேவைகள், குறைந்தபட்ச வரம்பு, சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கும் இடம் குறித்த கொள்கைகள், இயற்கை பேரிடர் காலங்களில் கூடுதல் வருவாயினை ஈட்ட உதவும் சிறப்பு வரி விகிதங்கள், சில மாநிலங்களுக்கான சிறப்பு வரைமுறைகள் மற்றும்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொடர்பான பிற இனங்கள் ஆகியவற்றில் பரிந்துரைகள் வழங்குவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் முக்கிய பணியாகும்.

இதுவரை 49 கூட்டங்களை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் நடத்தியுள்ளது.

## 16.1 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு மேல்வரி

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம், 2017, நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக. மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்ய 01.07.2017 முதல் 30.06.2022 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு இழப்பீடு வழங்க சரக்குகள் மற்றும் சேவைகள் இழப்பீடு மேல்வரி வழிவகை செய்கிறது. ஆடம்பர மற்றும் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய சில சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது ஜிஎஸ்டி வரியுடன் பல்வேறு விகிதங்களில் மேல்வரியும் விதிக்கப்படுகிறது. மாநிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு பெறப்பட்ட சந்தைக் கடன்களை திருப்பி செலுத்துவதற்காக, ஒன்றிய அரசு,

மேல்வரி விதிப்பதை 31.03.2026 வரை நீட்டித்துள்ளது. ஆனால், இழப்பீட்டு தொகை வழங்கும் காலம் 30.06.2022–க்கு பின்னர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால் நீட்டிக்கப்படவில்லை. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டினை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்குமாறு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டங்கள் மற்றும் இதர மன்றங்களில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறது.

## 16.2 2022–2023–ஆம் ஆண்டில் நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டங்கள்

2022–2023–ஆம் ஆண்டில், மூன்று சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டங்கள் கீழ்கண்டவாறு நடைபெற்றன:-

| மன்ற கூட்டம் | இடம் | நாள் |
|---|---|---|
| 47–ஆவது கூட்டம் | சண்டிகர் | 28.06.2022 மற்றும் 29.06.2022 |
| 48–ஆவது கூட்டம் | காணொளி காட்சி வாயிலாக | 17.12.2022 |
| 49–ஆவது கூட்டம் | புது டெல்லி | 18.02.2023 |

### 16.2.1 47–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்

47–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் கீழ்கண்ட பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன:–

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைப்பது தொடர்பாக, மாநிலங்கள் எழுப்பும் பல்வேறு கருத்துக்களைப் பரிசீலனை செய்யவும், மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் உரிய சட்டத் திருத்தங்களைப் பரிந்துரைக்கவும் அமைச்சர்கள் குழு (GoM) ஒன்றினை அமைக்க பரிந்துரைக்கப்பட்டது.
- அரசு துறைகளுக்கு மேற்கொள்ளப்படும் ஒப்பந்த கட்டுமான பணிகள் மீது விதிக்கப்பட்டு குறைக்கப்பட்ட 12% வரி திரும்பப் பெறப்பட்டு, 18% வரி விதிக்க பரிந்துரைக்கப்பட்டது.
- சூதாட்ட விடுதிகள் (Casino), குதிரைப் பந்தயம் (Race Course) மற்றும் இணையவழி விளையாட்டுகள் (Online Gaming) ஆகியவற்றிற்கான அமைச்சர்கள் குழு

(GoM) இந்நேர்வுகள் குறித்து மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட கூடுதல் கருத்துகளை மேல்பரிசீலனை செய்து இது தொடர்பான அறிக்கையினை குறுகிய காலத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

- வணிகர்களின் வசதிக்காக சரக்குகள் மற்றும் சேவைகள் மன்ற கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:-
    i. மின்னணு வணிகம் மூலம் பொருட்களை வழங்கும் வணிகர்களுக்கான விதிமுறைகளில் தளர்வுகள் மேற்கொள்ள கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
    ii. 2021–2022–ஆம் நிதியாண்டுக்கான படிவம் GSTR-4 காலங்கடந்து தாக்கல் செய்வதற்கான தாமத கட்டணம் 28.07.2022 வரை இரத்து செய்யப்பட்டது. மேலும், 2022–2023–ஆம் நிதியாண்டிற்கான முதல் காலாண்டு படிவம் GST CMP-08 தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 31.07.2022 வரை நீட்டிக்கப்பட்டது.

## 16.2.2 48–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்

48–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில், வணிகத்தை எளிதாக்கும் நடவடிக்கையாக பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன:-

- சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்காமல் போலி விற்பனைப் பட்டி மட்டும் வழங்கிய குற்றம் தவிர பிற குற்றங்களில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் குற்ற வழக்கு தொடர்வதற்கான குறைந்த பட்ச வரித் தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்த்துதல்.
- இணக்கத் தொகைக்கான தற்போதைய 50 விழுக்காடு முதல் 150 விழுக்காடு வரையிலான வரித் தொகை வரையறையை 25 விழுக்காடு முதல் 100 விழுக்காடாக குறைத்தல்.
- மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டப் பிரிவு 132, உட்பிரிவு (1), கூறு (g), (j) மற்றும் (k)-இல் குறிப்பிடப்பட்ட பின்வரும்

குற்றங்களை இப்பிரிவுகளைப் பொருத்தமட்டில் குற்றமற்றவைகளாக மாற்றம் செய்தல்–

- அரசு ஊழியரை தனது பணியை செய்ய விடாமல் தடுத்தல்;
- வேண்டுமென்றே சாட்சியங்களை அழித்தல்;
- தகவல்களை தராமல் இருத்தல்.

- பதிவு பெறாத வழங்குநர்கள் மற்றும் இணக்க முறையில் வரிசெலுத்துவோர், மின்னணு முறையில் வணிகம் செய்யும் வணிகர்கள் மூலம் உள் மாநில சரக்குகள் வழங்குவதற்கான அனுமதியை 01.10.2023 முதல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

### 16.2.3 49–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தின் முக்கிய நிரல்கள்

49–ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட வணிகத்தினை எளிமைப்படுத்தும் நடைமுறைகள் பின்வருமாறு:–

- பதிவுச் சான்று இரத்து செய்யப்பட்டதை திரும்பப் பெறுவதன் பொருட்டு

விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை 30 நாட்களிலிருந்து 90 நாட்களாக உயர்த்துதல் மற்றும் கூடுதல் கால அவகாசத்தை 90 நாட்களிலிருந்து 180 நாட்களுக்கு நீட்டித்தல்.

- ஆண்டறிக்கை படிவம் GSTR–9 காலங்கடந்து தாக்கல் செய்யும் நேர்வில் தாமத கட்டணத்தை, 2022–2023–ஆம் நிதியாண்டு முதல் சீரமைத்தல்.
- படிவம் GSTR-4, GSTR-9 மற்றும் GSTR-10 தாக்கல் செய்யாத இனங்களில், தாமத கட்டணத்தை நிபந்தனைகளுடன் கூடிய தள்ளுபடி/குறைப்பு செய்வதற்கு பொது மன்னிப்பு திட்டங்கள் கொண்டு வருதல்.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்ப்பாயம் அமைத்தல்.

## 17. குறை தீர்க்கும் குழு உருவாக்கம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரையின் பேரில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சம்பந்தமான குறைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, வர்த்தக மற்றும் தொழில்துறை சார்ந்த அமைப்புகள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

பங்கு உரிமையாளர்கள் அடங்கிய மாநில அளவிலான குறை தீர்க்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. வணிகவரி ஆணையர் மற்றும் மத்திய வரி முதன்மை தலைமை ஆணையர் இக்குழுவின் ஈரிணைத் தலைவர்களாக உள்ளனர். இக்குழு, பங்கு உரிமையாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட்டங்களை நடத்தி வருகிறது.

## 18. சரக்குகள் போக்குவரத்தினைக் கண்காணிக்கும் மின்னணு வழிப்பட்டி முறை

சரக்குகளை உள்ளடக்கிய பரிவர்த்தனைகளின் கணக்குகளை சுயமாக பராமரிப்பதற்காக மின்னணு வழிப்பட்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மாநிலங்களுக்கு இடையிலான, ரூ.50,000/–க்கு மேல் மதிப்புள்ள சரக்குகளின் போக்குவரத்திற்கு நாடு முழுவதும் 01.04.2018 முதல் மின்னணு வழிப்பட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், மாநிலத்திற்குள்ளான ரூ.1,00,000/–க்கு மேல் மதிப்புள்ள சரக்குகளின் போக்குவரத்திற்கு 02.06.2018 முதல் மின்னணு வழிப்பட்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை, சரக்குகள் போக்குவரத்தையும் உள்ளீட்டு வரி வரவு கோரிக்கைகளையும் சரிபார்க்க துறைக்கு உதவுகிறது.

மின்னணு வழிப்பட்டி உருவாக்குவதில், மாநிலத்திற்குள்ளேயான சரக்குகள் போக்குவரத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும், மாநிலங்களுக்கு இடையேயான சரக்குகள் போக்குவரத்தில் நான்காம் இடத்திலும் உள்ளது. மின்னணு வழிப்பட்டி அமைப்பில், வரி ஏய்ப்பு இனங்களைக் கண்டறிய பல்வேறு மேலாண்மை தகவல் அமைப்பு அறிக்கைகள் பயன்பாட்டில் உள்ளன.

31.03.2023 வரை இம்மின்னணு வழிப்பட்டி வலைதளத்தின் மூலம் 4.35 இலட்சம் வரி செலுத்துவோர் பதிவு செய்து, மாநிலத்திற்குள்ளேயான சரக்குகள் போக்குவரத்திற்காக 22.77 கோடி மின்னணு வழிப்பட்டிகளையும் மாநிலங்களுக்கிடையேயான சரக்குகள் போக்குவரத்திற்காக 20.91 கோடி மின்னணு வழிப்பட்டிகளையும் உருவாக்கி உள்ளனர்.

## 19. முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு மற்றும் முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் செயல்பாடுகள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற நபர் அல்லது பதிவு பெற விரும்பும் நபர், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவை

இரண்டிற்குமான வகைப்படுத்துதல், அறிவிக்கைகளின் பொருந்தும் தன்மை, வழங்கல் மற்றும் வழங்கல் தொடர்பான காலம் மற்றும் மதிப்பினை தீர்மானித்தல், உள்ளீட்டு வரிவரவு மீதான ஏற்பு. வரி செலுத்த வேண்டிய பொறுப்பு மற்றும் பதிவு செய்யப் பெற வேண்டிய பொறுப்பு ஆகிய இனங்களின் மீது தெளிவு பெறுவதற்காக முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பினை அணுகலாம்.

தமிழ் நாட்டிற்கான முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு, இணை ஆணையர் மற்றும் கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள அலுவலரை முறையே மாநில மற்றும் ஒன்றிய உறுப்பினராகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம், யானைக்கவுனி பாலம் சாலை, பூங்கா நகர், சென்னை – 600 003 என்ற முகவரியில் இயங்குகிறது. இவ்வலுவலகத்தின் மின்னஞ்சல் முகவரி ‘jc.adv.rul@ctd.tn.gov.in’ ஆகும்.

முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட முன் தீர்மானங்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழ்கண்டவாறு:-

| ஆண்டு | முடிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2021–2022 | 53 |
| 2022–2023 | 30 |

முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பினால் வழங்கப்படும் தீர்மானத்தை விண்ணப்பதாரர் ஏற்காத பட்சத்தில், தீர்மானம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம். மாநில வரி ஆணையரும் தமிழ்நாட்டிற்கான மத்திய வரி முதன்மை தலைமை ஆணையரும் இவ்வமைப்பின் உறுப்பினர்களாவர். இவ்வலுவலகத்தின் மின்னஞ்சல் முகவரி 'cct@ctd.tn.gov.in' ஆகும்.

முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால், வழங்கப்பட்ட ஆணைகளின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு:-

| ஆண்டு | வழங்கப்பட்ட ஆணைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2021–2022 | 19 |
| 2022–2023 | 2 |

## 20. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் மிகை இலாபம் ஈட்டுவதற்கு எதிரான அதிகார அமைப்பு மற்றும் மாநில அளவிலான கண்காணிப்பு குழு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்படி, சரக்குகள் அல்லது சேவைகள் மீதான வரி விகிதத்தில் ஏதேனும் குறைப்பு நேர்ந்தாலோ அல்லது உள்ளீட்டு வரிவரவின் சலுகையைப் பெற்றாலோ அதற்கேற்றவாறு சரக்குகள் அல்லது சேவைகள் மீதான உரிய விலை குறைப்பை சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்குவோர் பயனாளிகளுக்கு வழங்க வேண்டும். அவ்வாறு உரிய பலன்களை வேண்டுமென்றே அளிக்காவிடில் அது 'மிகை இலாபம்' ஈட்ட வழி வகுக்கிறது. மிகை இலாபம் ஈட்டும் செயல்களைத் தடுக்கவும் கண்காணிக்கவும் தேசிய அளவில் ஓர் அதிகார அமைப்பு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

மிகை இலாபத்திற்கு எதிரான நடவடிக்கைகளை 01.12.2022 முதல், தேசிய மிகை இலாபத்திற்கு எதிரான அதிகார அமைப்பிற்குப் பதிலாக இந்திய போட்டிநெறி

ஆணையம் (Competition Commission of India) மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பான இனங்களைக் கண்டறிய தமிழ்நாட்டில் மிகை இலாபத்திற்கு எதிரான மாநில தேர்வுக் குழுவில் இணை ஆணையர் (நுண்ணறிவு–I), சென்னை மற்றும் மத்திய வரி ஆணையர், சென்னை வடக்கு ஆணையரகம் (மத்திய வரி) ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

## 21. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பொது இணைய முகப்பு

வரி செலுத்துவோர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான அனைத்து வணிக நடவடிக்கைகளையும் ஒற்றைச்சாளர இணைய முகப்பு மூலம் மேற்கொள்ள ஏதுவாக 'www.gst.gov.in' என்ற பொது இணைய முகப்பை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையம் (GSTN) உருவாக்கியுள்ளது. புதிய பதிவு, திருத்தம், அறிக்கைகள் தாக்கல் செய்தல், திருப்புத் தொகைக்கான விண்ணப்பங்கள் போன்ற பணிகளுக்கான வரி செலுத்துவோர் மற்றும் வரி அலுவலர்களுக்கிடையிலான ஒற்றைத் தொடர்பு முறையாக இந்த இணைய முகப்பு செயல்படுகிறது. வரி செலுத்துவோருக்கு அறிவிப்புகள், ஆணைகள் போன்ற

அனைத்து தகவல் தொடர்புகளும் இந்த இணைய முகப்பின் மூலமாகவே வழங்கப்படுகின்றன.

**22. எளிய முறையில் வணிகம் செய்வதை ஊக்குவித்தல்**

கீழ்காணும் சேவைகளை வழங்குவதன் மூலம் எளிய முறையில் வணிகம் செய்வதை வணிகவரித் துறை ஊக்குவிக்கிறது:–

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் பதிவு, அறிக்கைகள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல், திருப்புத் தொகை பெறுதல் போன்ற பல்வகை வணிக நடவடிக்கைகளை இணைய வழியாகவே மேற்கொள்ளலாம்.
- வரி செலுத்துவோரின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதற்கும் மின்னணு முறையில் தொகை செலுத்துதல் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கவும் தனியானதொரு கட்டணமில்லா மாநில உதவி மையம் செயல்படுகிறது.
- வரி செலுத்துவோர் மின்னணு முறையில் அறிக்கைகள் தாக்கல் செய்வதற்கான கட்டணமில்லா சேவை மையம் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் செயல்படுகிறது.

- வரி செலுத்துவோர் வரி அறிக்கைகளைத் தாமதமாக தாக்கல் செய்வதைத் தடுக்கும் வகையில், அவர்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக ஒரு புதிய அழைப்பு மையம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் சென்னையில் துவக்கப்படவுள்ளது.

## 22.1 'எளிய வணிகப் பிரிவு' உருவாக்கம்

புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் வணிக நட்புச் சூழலை உருவாக்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 'எளிய வணிகப்பிரிவு' ஒன்றை உருவாக்க இத்துறை உத்தேசித்துள்ளது. அரசாணை (நிலை) எண்.14, வணிகவரி (ம) பதிவுத் (அ1) துறை, நாள் 28.02.2023–இன்படி, வணிகவரி பணியாளர் பயிற்சி நிலைய இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழான 'குறை தீர்க்கும் குழு', 'எளிய வணிகப்பிரிவு' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப்பிரிவானது, குறை தீர்க்கும் பிரிவு, தர கண்காணிப்பு பிரிவு, சமூக ஊடகப் பிரிவு என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- பதிவு, திருப்புத் தொகை போன்ற துறை நடைமுறை செயல்பாடுகளில் வரி செலுத்துவோருக்கு ஏற்படும் குறைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் 'குறை தீர்க்கும் பிரிவு' செயல்பட்டு வருகிறது.
- துறையின் உரிய அலுவலர்களால், பதிவு, திருப்புத் தொகை, கூர்ந்தாய்வு, தணிக்கை, ஆய்வு மற்றும் நுண்ணறிவுப் பணிகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் தரத்தினை மறுஆய்வு செய்ய 'தர கண்காணிப்பு பிரிவு' உருவாக்கப்பட்டுள்ளது.
- டிவிட்டர், முகநூல் போன்ற சமூக ஊடகங்களைக் கையாளவும் கருத்துப்படங்கள் மற்றும் உள்ளடக்கங்களை வணிக வரி ஆணையரின் ஒப்புதலுடன் உருவாக்கவும் பதிவிடவும் 'சமூக ஊடகப் பிரிவு' உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பிரிவு, சமூக ஊடகங்களில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் பணிகளையும் மேற்கொள்ளும்.

## 23. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்

'தமிழ்நாடு வணிகர் நல வாரியம்' முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்ததன் அடிப்படையில் 1989–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

வாரிய உறுப்பினர்களுக்கு கீழ்கண்ட ஒன்பது நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன:-

| வ. எண் | நலத் திட்டங்களின் பெயர் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | குடும்பநல உதவி | | 3,00,000/– |
| 2 | மருத்துவ உதவி | | |
| | அ | இதய மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சை | 50,000/– |
| | ஆ | செயற்கை சிறுநீர் பிரிப்பு, குருதி குழல் சீரமைப்பு, வேதிமுறை நோய்நீக்கம், கதிர்வீச்சு சிகிச்சை | 15,000/– |
| | இ | செயற்கை சிறுநீர் பிரிப்பு, குருதி குழல் சீரமைப்பு, வேதிமுறை நோய்நீக்கம், கதிர்வீச்சு தொடர்பான சிகிச்சைகளுக்குப் பிறகு அறுவை சிகிச்சை | 25,000/– |
| | ஈ | கருப்பை அகற்றும் அறுவை சிகிச்சை | 20,000/– |
| 3 | கல்வி உதவி | | |
| | அ | கலை மற்றும் அறிவியல் கல்வி | 5,000/– |
| | ஆ | தொழிற்கல்வி | 10,000/– |
| 4 | விளையாட்டு வீரர்களுக்கான உதவி | | |
| | அ | சர்வதேச அளவு | 25,000/– |
| | ஆ | தேசிய அளவு | 10,000/– |
| | இ | மாநில அளவு | 5,000/– |
| | ஈ | மாவட்ட அளவு | 3,000/– |
| 5 | தீ விபத்துக்கான நிவாரண உதவி | | 20,000/– |

| | | | |
|---|---|---|---|
| 6 | சிறுகடைகள் (Bunks) அமைப்பதற்கான நிதி உதவி | | 10,000/- |
| 7 | மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை (பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு) | | |
| | அ | முதலிடம் | 5,000/- |
| | ஆ | இரண்டாமிடம் | 3,000/- |
| | இ | மூன்றாமிடம் | 2,000/- |
| 8 | திருமண உதவித்தொகை | | 10,000/- |
| 9 | விபத்துக்கால உதவித்தொகை | | 25,000/- |

வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் 31.03.2023 வரை, மேற்குறிப்பிட்ட நலத்திட்டங்கள் மூலமாக ரூ.3.20 கோடி அளவில் மொத்தம் 8,880 உறுப்பினர்கள் பயன்பெற்றுள்ளனர். 31.03.2023 வரை இவ்வாரியத்தில் 88,171 வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர்.

தகுதியுள்ள வணிகர்கள் தங்களை வணிகர் நல வாரியத்தில் இணைய வழியாகவே உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ள இயலும்.

## 23.1 உயர்த்தப்பட்ட குடும்ப நல உதவித் தொகை மற்றும் தீ விபத்திற்கான நிவாரண உதவித் தொகை

வணிகர் தினத்தை முன்னிட்டு திருச்சியில் நடைபெற்ற வணிகர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வணிகர் நல வாரிய

உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் குடும்ப நல உதவித் தொகையை ரூபாய் 1,00,000/-யிலிருந்து ரூபாய் 3,00,000/-ஆகவும், வணிக இடங்களில் நிகழும் தீ விபத்திற்கான நிவாரண உதவித் தொகையை ரூ.5,000/-யிலிருந்து ரூ.20,000/-ஆகவும் உயர்த்தி அறிவித்தார்கள். இவ்விரு நலத்திட்டங்களும் 30.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன.

## 24. மின் ஆளுமை

வரி செலுத்துவோரின் வசதிக்காக பல்வேறு மின் ஆளுமை முயற்சிகள் துறையால் எடுக்கப்பட்டுள்ளன.

### 24.1 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்பு மூலம் புதிய பதிவு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் எந்தவொரு வணிக நிறுவனத்தின் புதிய பதிவும் இணைய பொது முகப்பு மூலம் இணைய வழியாகவே மேற்கொள்ளப்படுகிறது. வரி செலுத்துவோர் தங்கள் வணிகத்தைப் பதிவு செய்யும் பொருட்டு வணிகவரி அலுவலகத்திற்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை.

தமிழ்நாட்டில், வணிகம் செய்து வரும் சுமார் 11.67 இலட்சம் வரி செலுத்துவோர் இணையதளம் வாயிலாக வழங்கப்படும் மின்னணு சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களில், 6.96 இலட்சம் வரி செலுத்துவோர் மாநில அதிகார வரம்பிலும் மீதமுள்ள 4.71 இலட்சம் வரி செலுத்துவோர் மத்திய அதிகார வரம்பிலும் உள்ளனர்.

## 24.2 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை தாக்கல் மற்றும் வரி வசூல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வரி விவர அறிக்கைகளின் அனைத்து நடைமுறைகளிலும் மின்னணு முறையில் தாக்கல் செய்தல், விலைப்பட்டியல் விவரங்களைப் பதிவேற்றுதல், உள்ளீட்டு வரி வரவு குறித்த தகவல்கள் தானாக உருப்பெறுதல் ஆகியவை உள்ளடங்கியுள்ளது. இந்த வழிமுறை வெளிப்படைத்தன்மையோடு இருப்பது மட்டுமல்லாமல் வரி செலுத்துவோர் எளிதாக வரி விவர அறிக்கையினைத் தாக்கல் செய்யவும் தகுதியான உள்ளீட்டு வரி வரவினைப் பெறவும் உதவுகிறது. சுமார் 6.25 இலட்சம் வரி செலுத்துவோர், வரி செலுத்துவதோடு GSTR-3B வரி விவர அறிக்கையினையும் தாக்கல் செய்கிறார்கள். மாநில

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியும் ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியும் இந்த மின்னணு முறையின் மூலம் மாதந்தோறும் அரசால் பெறப்படுகிறது.

## 24.3 மதிப்பு கூட்டு வரியின் கீழ் வரி விவர அறிக்கை தாக்கல் மற்றும் வரி வசூல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்குட்படாத பொருட்களைக் கையாளும் வணிகர்கள் பயன்படுத்துவதற்காக வணிகவரித்துறையால் தனியானதோர் இணையதள முகப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வணிகர்கள் இந்த இணையதள முகப்பைப் பயன்படுத்தி, வரி விவர அறிக்கைகளைத் தாக்கல் செய்தும் வரி செலுத்தியும் வருகின்றனர்.

## 24.4 பின்புல அலுவலக பயன்பாட்டு மென்பொருள்

வணிகவரித் துறையின் பின்புல அலுவலக மென்பொருள் பயன்பாடு, மாதிரி–1 அமைப்பிலிருந்து மாதிரி–2 அமைப்பிற்கு 05.09.2022 முதல் வெற்றிகரமாக மாற்றப்பட்டது, இந்த மாதிரி–2 அமைப்பின் கீழ், அனைத்து பின்புல அலுவலக இடைமுகப்பு மற்றும் பதிவு செய்தல், வரி விவர அறிக்கைகள் தாக்கல், வரி செலுத்திய விவரங்கள், வரி

விவர அறிக்கைக் கூர்ந்தாய்வு, வரி திருப்புத் தொகை, மேல்முறையீடு, நுண்ணறிவு, தணிக்கை போன்ற பல்வேறு அலுவலக செயல்பாடுகள் தொடர்பான சேவைகள் அனைத்தும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையத்தால் (GSTN) வரி அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படுகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மாதிரி–1) மற்றும் மதிப்பு கூட்டு வரி தொடர்பான பின்புல அலுவலக இடைமுகப்பில் ஏற்படும் குறைகளைக் களையும் பொருட்டு முழுமையான தீர்வு திட்டம் துறையால் 2016–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் பின்புல மென்பொருள் மாதிரி–1–லிருந்து மாதிரி–2–க்கு மாறிய நிலையில், இம்மாற்றத்தை சுமூகமாக நடைமுறைப்படுத்த ஏதுவாக ஏற்கனவே கணினி ஒருங்கிணைப்பாளருடன் செய்யப்பட்டிருந்த ஒப்பந்தமானது செப்டம்பர் 22, 2022 அன்று நடைபெற்ற மாநில அளவிலான அதிகாரமளிக்கப்பட்ட குழு (State Level Empowered Committee) கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், பிப்ரவரி 2023 முதல் ஜனவரி 2024 வரை மேலும் ஒரு வருடத்திற்கு, அரசாணை (நிலை) எண்.9, வணிகவரி மற்றும் பதிவுத்

(டி1) துறை, நாள் 23.01.2023–இன்படி நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 24.5 புள்ளியியல் பகுப்பாய்வு மென்பொருள்

வரி ஏய்ப்பைக் கண்டறிவதற்காகவும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வருவாய் இழப்பைத் தடுப்பதற்காகவும் மேம்படுத்தப்பட்டதொரு வணிக நுண்ணறிவு மென்பொருள், அதாவது, 'புள்ளியியல் பகுப்பாய்வு முறை' [Statistical Analysis System (SAS)] இத்துறையால் பயன்படுத்தப்படுகிறது. இப்பகுப்பாய்வு மென்பொருள், நுண்ணறிவுப் பிரிவின் நடவடிக்கைகளை திட்டமிடுவதிலும் தரவுகளின் பகுப்பாய்வுகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இம்மென்பொருளால் பின்வரும் அறிக்கைகள் உருவாக்கப்படுகின்றன:–

| வ. எண் | விவரங்கள் | அறிக்கைகள் |
|---|---|---|
| 1 | வரி விவர அறிக்கைகள் | i வரி விவர அறிக்கையில் பொருந்தாத தரவுகளைத் தெரிவித்தல்.<br>ii செலுத்த வேண்டிய வட்டி<br>iii பதிவு ரத்து செய்யப்பட்ட வணிகர்களிடமிருந்து வருவாய். |
| 2 | பதிவு | பொருட்களின் அடிப்படையிலான பகுப்பாய்வு மற்றும் இடர்காரண வடிவம் |

| | | |
|---|---|---|
| 3 | பணம் செலுத்துதல் | i பொருள் வாரியான வருவாய்<br>ii வரி விகித அடிப்படையிலான பகுப்பாய்வு<br>iii துறை வாரியான பகுப்பாய்வு |
| 4 | புள்ளியியல் பகுப்பாய்வு முறை (SAS) எச்சரிக்கைகள் | மாதிரி–1 பின்புல அமைப்பின் மூலம் அனுப்பப்பட்ட எச்சரிக்கைகளின் நிலை |
| 5 | மூன்றாம் தரப்பு தரவு | i மின்னணு வழி பட்டி மற்றும் GSTR–3B தாக்கல் செய்யப்படாதவைகளின் ஒப்பீடு.<br>ii இணக்கவரி செலுத்தும் வணிகர்களின் மாநிலங்களுக்கு இடையேயான மின்னணு வழி பட்டி |

மேற்படி பகுப்பாய்வு அறிக்கைகள், வரிஏய்ப்பு செயல்களில் ஈடுபடும் வரி செலுத்துவோரைக் கண்டறிந்து, வரி ஏய்ப்பை கட்டுப்படுத்த வரி விதிப்பு அலுவலர்களுக்கு உதவுகின்றன.

## 24.6 வரி விவர அறிக்கைகள் மீது கூர்ந்தாய்வு

பகுப்பாய்வு மென்பொருளை ஒருங்கிணைப்பதன் மூலமே, வரி விவர அறிக்கைகளை வரி அலுவலர்கள் திறம்பட கூர்ந்தாய்வு செய்திட இயலும். கணினியில் வழங்கப்படும் பகுப்பாய்வு அறிக்கைகளைப் பயன்படுத்தி, வரி செலுத்துவோர் தாக்கல் செய்த வரி விவர அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிவர்த்தனைகளுள் காணப்படும் முரண்பாடுகள், வரி அலுவலர்களால் கூர்ந்தாய்வு

செய்யப்படுகிறது. இவ்வாறு வரி விவர அறிக்கைகளை ஆய்வு செய்வதன் மூலம் வரி ஏய்ப்பு செய்பவர்கள் மற்றும் போலி விற்பனை பட்டி வழங்குபவர்கள் (Bill Traders) கண்டறியப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 24.7 அழைப்பு மையம்

அரசாணை (நிலை) எண். 196, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 20.12.2022–இன்படி அனுமதிக்கப்பட்டுள்ள வெளிச் செல்லும் அழைப்பு மையம் (outbound call centre) ஒன்று, சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரிகள் இணைப்புக் கட்டடத்தில் நிறுவப்பட்டு வருகிறது. வரி விவர அறிக்கை தாக்கல் செய்யாதவர்களையும் வரி செலுத்த தவறுபவர்களையும் இந்த வெளிச்செல்லும் அழைப்பு மையம் உன்னிப்பாக கண்காணிக்கும். அழைப்பு மையத்தின் அலுவலர்கள், வரி விவர அறிக்கை தாக்கல் செய்யாதவர்கள் மற்றும் வரி செலுத்த தவறுபவர்களை தொலைபேசியில் அழைத்து, வரி விவர அறிக்கையினைத் தாக்கல் செய்து, உரிய வரியை உடனடியாக செலுத்துமாறு கோருவார்கள். இப்பணியின் தொடர் நடவடிக்கைகளும் அழைப்பு மையத்தால் மேற்கொள்ளப்படும்.

## 24.8 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை வணிகவரித் துறையின் ஆய்வில் ஈடுபடுத்துதல்

அரசாணை (நிலை) எண். 112, வணிகவரி மற்றும் பதிவுத் (டி1) துறை, நாள் 20.07.2022–இன்படி சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்கள்/நிபுணர்களை வெளிச் சந்தை மூலம் தேர்ந்தெடுக்க ரூ.38 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

வணிக இடத்திற்கு ஆய்வுக்காக உரிய அலுவலர்கள் செல்லும்போது இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட நிபுணர்களும் உடன் செல்வார்கள். பல்வேறு மென்பொருள் மற்றும் வன்பொருள் குறித்து அறிந்திருக்கும் இந்நிபுணர்கள், வணிகர்களால் பயன்படுத்தப்படும் கணக்கு பதிவு முறைகள், விலைப்பட்டி உருவாக்கும் முறைகள் மற்றும் 'விற்பனை முனைய கருவி' (point of sale systems) போன்ற பரிவர்த்தனை முறைகளை ஆய்வு செய்து வன்பொருள் மற்றும் மேகக்கணினியிலிருந்து தரவுகளை வெளிக்கொணர்வார்கள். தரவுகளை மீட்டெடுத்து, சரிபார்த்து, ஆய்வினை திறம்பட மேற்கொள்ள வரி விதிப்பு அலுவலர்களுக்கு இவர்கள் உதவுவார்கள்.

இந்த ஆய்வு முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம், வணிக இடத்திலிருந்து அனைத்து தொடர்புடைய தரவுகளையும் துறையால் துல்லியமாகப் பெற முடியும். வரிஏய்ப்பு செயல்களைக் கண்டறிந்து அதன் மூலம் வருவாய் இழப்பைத் தடுப்பதில் இந்த ஏற்பாடு சிறந்த பலன்களைத் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 24.9 ஜிஎஸ்டி பிரைம் மென்பொருள் (GST PRIME)

ஜிஎஸ்டி பிரைம் என்பது, பல்வேறு மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) அறிக்கைகள் மூலம் வசூலிக்கப்படும் வரி தொடர்பான தகவல்களை பகுப்பாய்வு செய்து கண்காணிக்கும் பணியில் வரி அலுவலர்களுக்கு உதவும் வகையில், தேசிய தகவல் மையத்தால் (NIC) உருவாக்கப்பட்ட ஒரு பயன்பாட்டு மென்பொருளாகும். இந்த மென்பொருளானது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பொது இணைய முகப்பு (GST Common Portal), மின்னணு வழிப்பட்டி மற்றும் வரி அலுவலர்களுக்கு இடையிலான ஓர் இணைப்பாக செயல்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படக்கூடிய பல்வேறு அறிக்கைகளைப் பெற உதவுகிறது. இந்த மென்பொருளை செயல்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

## 24.10 எனது விலைப்பட்டி – எனது உரிமை

அரசாணை (நிலை) எண்.126, வணிக வரி மற்றும் பதிவுத்(சி2) துறை, நாள்: 26.07.2022–இன்படி 'எனது விலைப்பட்டி – எனது உரிமை' என்ற ஒரு புதிய திட்டம் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் பொது மக்கள் தாங்கள் வாங்கும் பொருட்களுக்கு உரிய விலைப்பட்டியை கேட்டுப்பெறும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, வணிகர்களிடையே விலைப்பட்டி வழங்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காகவும் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விலைப்பட்டியலோடு சரக்குகள் விற்பனை செய்யப்படுவது உறுதி செய்யப்படும்; அதன் விளைவாக வருவாயும் அதிகரிக்கும்.

இத்திட்டத்தின் கீழ், நுகர்வோர் தாங்கள் பெற்றுகொண்ட விலைப்பட்டிகளை அரசு இணையதளம் அல்லது தங்களது கைபேசி செயலி மூலம் பதிவேற்றம் செய்ய இயலும். அவ்வாறு பதிவேற்றம் செய்யும் நுகர்வோர் காலமுறை அடிப்படையில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பரிசுத் தொகை

வழங்கப்படும். இந்த திட்டத்திற்கான இணையதள/கைபேசி செயலி தேசிய தகவல் மையத்தால் (NIC) உருவாக்கப்பட்டு வருகிறது.

### 24.11 சுற்றும்படைக்கான கட்டுப்பாட்டு அறை

நுண்ணறிவுப் பிரிவில் உள்ள சுற்றும்படை அலுவலர்களுக்கு போதுமான தரவுகள் / வழிகாட்டுதல்களை வழங்கவும் சுற்றும்படை நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் மைய கட்டுப்பாட்டு அறை ஒன்று, சென்னை–6, கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரி கட்டடத்தில் நிறுவப்பட்டு வருகிறது. இம்மைய கட்டுப்பாட்டு அறையிலிருந்து சுற்றும்படை அலுவலர்கள் பயன்படுத்தும் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள தடங்காட்டி கருவி (GPS) மற்றும் புகைப்படக்கருவி மூலம் அவ்வாகனங்களை நிகழ்நேரத்தில் கண்காணிக்க இயலும். மேலும், மின்னணு வழிப்பட்டி (e–Way Bill) தரவுத்தளம் மற்றும் தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி அவர்களை வழிநடத்தவும் இயலும். சரக்கு வாகனங்கள் தணிக்கை செய்யப்படும்போது, கட்டுப்பாட்டு அறை உரிய தகவல்களையும் வழிகாட்டுதலையும் சுற்றும்படை அலுவலர்களுக்கு வழங்கும்.

## 24.12 பிற இணைய வழி சேவைகள்

வணிகப் பெருமக்களுக்கு https://ctd.tn.gov.in என்ற இணையதளத்தில் பின்வரும் வசதிகளும் / சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன:

- சட்டங்கள் மற்றும் விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசாணைகள் மற்றும் அறிவிக்கைகளைப் பார்வையிடலாம்; பதிவிறக்கம் செய்யலாம்.
- வணிகர் செலுத்திய வரி, அவரது பக்கமுகப்பு (வணிகரின் வரி பேரேடுகள்) ஆகியவற்றைப் பார்வையிடும் வசதி.
- சரக்குகளின் மீதான வரி விவரங்கள் அடங்கிய அட்டவணை மற்றும் வரி விகிதத்தை இணையதளத்தில் தேடும் வசதி.
- அடையாள எண் (TIN) அல்லது வணிகத்தின் பெயர் மூலம் வரிசெலுத்துவோர் விவரங்களை இணையதளத்தில் தேடும் வசதி.

## 25. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள்

கடந்த 2022–ஆம் ஆண்டில், அதாவது, 01.01.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் இச்சட்டத்தின் கீழ் 625 விண்ணப்பங்கள் பெறப்பட்டு,

நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிய தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு விரைந்து அனுப்பப் பட்டுள்ளன.

## 26. வணிகவரி அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டுதல் மற்றும் புனரமைப்பு

- 2021–2022–ஆம் ஆண்டில், போளூர், துறையூர், ஆத்தூர் (ஊரகம்), ஆத்தூர் (நகரம்), சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்த வணிகவரிக் கட்டடம் கட்டும் பொருட்டு ரூ.9.64 கோடி நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வலுவலகங்கள் விரைவில் செயல்பாட்டுக்கு வரும்.
- 2022–2023–ஆம் ஆண்டில் மதுரையில் உள்ள ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டடம் மற்றும் வணிகவரி அலுவலகங்கள் இயங்கி வரும் சென்னை மயிலாப்பூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தினைப் புதுப்பிப்பதற்கு, ரூ.11.85 கோடி நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 27. 2022–2023–ஆம் ஆண்டில் வணிகவரித் துறையில் மேற்கொள்ளப்பட்ட பிற புதிய முயற்சிகள்

### 27.1 வணிகவரித் துறையின் மறுசீரமைப்பு – உதவியாளர் நிலையில் உள்ள 1000 பணியிடங்களை தரம் உயர்த்துதல்

2021–2022 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மாறிவரும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளவும் எளிதாக வணிகம் செய்வதை உறுதி செய்யவும் அரசுக்கு வருவாயைப் பெருக்கவும் துறையின் வெட்டு விளிம்பு நிலையில் மனித வளத்தை அதிகரிக்கவும் வணிகவரித் துறை மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, வணிகவரித் துறையில் உள்ள 1000 உதவியாளர் பணியிடங்களை, 840 துணை வணிகவரி அலுவலர் பணியிடங்களாகவும் 160 வணிகவரி அலுவலர் பணியிடங்களாகவும் தரம் உயர்த்தி, அரசாணை (நிலை) எண் 20, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 09.03.2023–இன்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ், வரிவிவர அறிக்கைகள் தாக்கல், திருப்புகை, கூர்ந்தாய்வு,

தணிக்கை மற்றும் ஆய்வு ஆகிய செயல்பாடுகளை மேலும் திறம்பட கண்காணிக்க முடியும். புதிய தணிக்கைப் பிரிவை ஏற்படுத்தி, அதில் அதிக அலுவலர்களை ஈடுபடுத்துவதன் மூலம் வரி ஏய்ப்பு தடுப்பு தொடர்பாக சீரிய முயற்சிகள் மேற்கொண்டு அரசுக்கு அதிக வருவாயை ஈட்ட முடியும்.

## 27.2 ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணையாக குறைந்தபட்சம் ஒரு வணிகவரி மாவட்டம் உருவாக்கம்

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணையாக குறைந்தபட்சம் ஒரு வணிகவரி மாவட்டம் உருவாக்கும் நோக்கில், 13 வணிகவரி மாவட்டங்களை வருவாய் மாவட்டங்களுக்கு இணையாக வணிகவரித் துறையில் உருவாக்கிட அரசாணை (நிலை) எண்.150, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 09.11.2021–இன்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. புதிய வணிகவரி மாவட்டங்களை உருவாக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 27.3 வரி ஏய்ப்பினைத் தடுக்க உதவுபவர்களுக்கு வெகுமதி

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, வரி ஏய்ப்பு செய்வோர் குறித்து வணிகவரித் துறைக்கு தகவல் தெரிவிக்கும் பொதுமக்களுக்கும், வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து சிறப்பாக வரி வசூல் செய்யும் வணிகவரித் துறை அலுவலர்களுக்கும் வெகுமதி வழங்க, ரூ.1.66 கோடி நிதி ஒதுக்கி அரசாணை (நிலை) எண் 100, வணிகவரி மற்றும் பதிவுத் (எப் 1) துறை, நாள் 24.06.2022–இன்படி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 27.4 வரி ஆய்வுக் குழு

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 207, வணிகவரி மற்றும் பதிவுத் (A2) துறை, நாள் 30.12.2022–இன்படி வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் இரண்டு வரி ஆலோசகர்கள், ஓர் உதவி ஆணையர் மற்றும் ஒரு வணிகவரி அலுவலர் ஆகியோரைக் கொண்ட வரி ஆய்வுக் குழு (Tax Research Unit) அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

வருவாய் வளர்ச்சி நிலைகள், வரிவிகிதத்தில் மாற்றம், வருவாய் ஆதாரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதோடு துறை வாரி வேறுபாடுகள், புலனாய்வு/தணிக்கைக்கான காரணிகள் மற்றும் வரி செலுத்துவோர் பின்பற்றும் வரி ஏய்ப்பு நடைமுறைகளை பகுப்பாய்வு செய்யும் பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

## 28. முடிவுரை

முனைப்புடன் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளினால் 2022–2023–ஆம் நிதி ஆண்டில் மாநிலம் இதுவரை கண்டிராத அளவில் ரூ.1,33,540.70 கோடி வருவாயை ஈட்டி வணிகவரித் துறை சாதனை படைத்துள்ளது. களப்பணிகளில் ஒருங்கிணைந்த செயலாக்கம் மற்றும் வரி நிர்வாகத்தின் கீழ் எளிதாக தொழில் நடத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வணிகர்களுக்கு சிறந்த சேவையை வழங்கி வரி இலக்கை அடைவதே வணிகவரித் துறையின் உயரிய நோக்கமாகும்.


**பி. மூர்த்தி**
**வணிகவரி மற்றும் பதிவுத்துறை**
**அமைச்சர்**

# வணிகவரித் துறை

**பல்வேறு வரிச்சட்டங்களின் கீழ் 2022-2023-ஆம் ஆண்டில்**


**ஈட்டப்பட்ட வருவாய் வசூல் விவரம்**

(ரூபாய் கோடியில்)





| வரி விவரம் | வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாதவை | 58,234.92 |
| மதிப்பு கூட்டு வரி மற்றும் மற்றவை | 896.96 |
| மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 36,353.12 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு | 21,840.87 |
| சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு | 16,214.83 |
| **மொத்தம்** | **1,33,540.70** |

## வணிகவரித் துறையின் மொத்த வருவாய் வசூலின்வளர்ச்சி சதவிகிதம்



## வணிகவரித் துறையின் வருவாய் மற்றும் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்திக்கு இடையேயான விகிதாச்சாரம்






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை 18.11.2022 அன்று வணிகவரி மற்றும் பதிவுத்துறைகளில் 2021-2022 –ஆம் ஆண்டைவிட 2022-2023 –ஆம் ஆண்டில் வணிகவரித் துறையில் ரூபாய் 20,529 கோடியும், பதிவுத்துறையில் ரூபாய் 2,785.65 கோடியும், என மொத்தம் ரூபாய் 23,314.65 கோடி கூடுதலாக வருவாய் ஈட்டியதை முன்னிட்டு, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர், முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., பதிவுத்துறைத் தலைவர் திரு.ம.ப.சிவன் அருள், இ.ஆ.ப., மற்றும் வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மா.சௌ.சங்கீதா, இ.ஆ.ப., ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



21.11.2022 அன்று சென்னையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், வணிகவரி கோட்ட இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த அக்டோபர் மாதத்திற்கான மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு தீரஜ்குமார், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மா.சௌ.சங்கீதா, இ.ஆ.ப., மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




11.05.2022 அன்று சென்னையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் வணிகவரித் துறையின் சுற்றும் படைகளுக்கான புதிய வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு. க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



21.11.2022 அன்று சென்னையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் வணிகவரித் துறைக்கு தேர்வான 10 உதவி ஆணையர்களுக்கு பணி நியமண ஆணைகளை வழங்கினார். உடன் முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., மற்றும் வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மா.சௌ.சங்கீதா, இ.ஆ.ப., உள்ளனர்.




11.05.2022 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் வணிகவரித் துறையில் சிறப்பாக செயலாற்றிய அலுவலர்களுக்கு வெகுமதிக்கான செயல்முறை ஆணைகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் வழங்கினார். இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மற்றும் வணிகவரித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.